பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 235 ஆடி 06 ஆம் நாள் திங்கட்கிழமை 22 ஜுலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dip/HND in Business Management
Leading to BBA Hons
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## பிள்ளையான் – மனோ கூட்டு?

மட்டக்களப்பு, ஜுலை 22
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் மூன்று ஆண்டுகளாக தடுப்புக்காவலில் உள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனை, அமைச்சர் மனோ கணேசன் நேற்றுக் காலை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். 19

### கல்முனை பிரதேச செயலக விவகாரம்:

# தீர்வு கிடைக்காவிட்டால் எதிர் அணியில் அமர்வோம்

### ரணிலை மிரட்டுகின்றது முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, ஜுலை 22
கல்முனை உப பிரதேச செயலக விவகாரத்துக்கு தலைமை அமைச்சர் உடனடியாகத் தீர்வு காணாவிட்டால் எதிர்க்கட்சி வரிசையில் சென்று அமரப்போகும் செய்தியை நாளை (இன்று) முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று அவரை நேரில் சந்தித்துக் கூறப்போகின்றோம் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையாக தரம் உயர்த்த ஒரு வாரத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடந்த வெள்ளிக்கிழமை உறுதியளித்திருந்தார். இதற்கு அமைவாக கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரம் உயர்த்தும்போது எல்லை நிர்ணயம் எப்படி அமையவேண்டும் என்ற வரைபடத்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் நேற்று வழங்குவதாக, அமைச்சர் வஜிர தெரிவித்தபோதும், அது வழங்கப்படவில்லை. 19

## அரச தலைவர் தேர்தலில் ரணில் அணிக்குச் சாவுமணியடிக்கும் வேட்பாளரைக் களமிறக்குவார் மகிந்த

### தினேஸ் கூறுகின்றார்

கொழும்பு, ஜுலை 22
அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பில் வேட்பாளர் களமிறங்குவது உறுதி. சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரும்பினால் 19

## சுட்டுக் கொல்லப்பட்டவர் இனங்காணப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜுலை 22
மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொலை செய்யப்பட்ட இளைஞன் அவரது உறவினர்களால் நேற்று அடையாளம் காணப்பட்டார். கொடிகாமம் கச்சாய்ப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் கவிகஜன் (வயது - 23) என்று அடையாளம் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இளைஞனின் தந்தை புற்றுநோயால் பாதிக் 19



## எனது மகன் வாள்வெட்டு குழுவைச் சேர்ந்தவன் அல்ல

### கண்ணீர்விட்டழுதார் தாயார்

யாழ்ப்பாணம், ஜுலை 22
எனது மகனுக்கும் வாள்வெட்டு குழுவுக்கும் தொடர்பில்லை. இவ்வாறு, மானிப்பாய் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் தாயார் 19

## மானிப்பாய் சூட்டுச் சம்பவம் மக்களுக்கு மகிழ்ச்சியாம்

யாழ்ப்பாணம், ஜுலை 22
யாழ்ப்பாணம் மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர் என்று வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி விஜயகுணவர்த்தன தெரிவித்தார்.

மானிப்பாய் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில், உதயன் பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'யாழ்ப்பாணத்தில் அமைதியான சூழல் ஏற்ப 19

### இளைஞன் சுட்டுக்கொலை

## இரண்டு பொலிஸாரும் மருத்துவமனையில் சேர்ப்பு

### காயமடைந்தனர் என்கிறது மானிப்பாய் பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜுலை 22
மானிப்பாயில் இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் இரவே காலில் காயமடைந்ததாகத் தெரிவித்து இரண்டு பொலிஸாரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு முன்னர் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் அவர்கள் இரு 19

### நம்பிக்கையில்லாத் தீர்மானம்:

## தமிழ்க் கூட்டமைப்புக்கு கூறிய ஆலோசனையை ஆனந்தனுக்குச் சொல்ல மறந்துவிட்டார் சுரேஸ்

### கிண்டலடிக்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

வவுனியா, ஜுலை.22
நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கூறிய சுரேஸ் பிரேமச்சந்திரன், அதனை அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு கூற மறந்து விட்டார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார். 19


## இளைஞர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜுலை 22
மானிப்பாயில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞனின் சடலத்தைப் பார்க்கச் சென்ற நான்கு இளைஞர்கள், யாழ்ப்பாணப் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞன் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். அவருடன் சென்ற சிலர் தப்பித்துள்ளதாகவும், பொலிஸார் 19

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
Harikanan Express
20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
021 222 2737

## நெருப்பை இந்துக்கள் கடவுளாக ஏன் வழிபடுகிறார்கள் தெரியுமா..?



இந்துக்களின் வழிபாட்டில் நெருப்பு ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. நெருப்பு மிகச் சுத்தமானது. மிக உக்கிரமானது. இந்த இரண்டும் கலந்த மனிதப்பிறவியாக இருக்க வேண்டும் என்பது முன்னோர்களின் எண்ணம். அநீதியைக் கண்டால் அழித்து ஒழிப்பது என்பது மனிதருக்குள் இருக்க வேண்டும்.

அதேநேரம் குற்றங்கள் புரியாத குற்றங்களிலிருந்து வெகுதூரம் தள்ளி இருக்கின்ற பரிசுத்தம் இருக்க வேண்டும். இந்த குணங்களைக் கொண்ட நெருப்பை வணங்குவது முன்னோர் வகுத்த வழி. அதுமட்டுமல்ல, நெருப்பு இடையறாது சலனமுள்ளது. ஆனால் சலனம் இல்லாதது போலத் தோன்றும். உற்று அந்த சலனத்தைக் கவனித்தால் அந்த ஆட்டத்தைப் பார்க்க நம்முடைய மனதிற்குள் உள்ள ஆட்டம் மெல்ல மெல்ல அடங்கும்.

நெருப்பை முன் வைத்து தியானிப்பது, நெருப்பை வளர்த்து அதனுள் மனதைச் செலுத்துவது என்பது மனதை கட்டுப்படுத்தக்கூடிய ஓர் அழகான பயிற்சி. நெருப்பு என்பது ஹோமகுண்டமாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

குத்துவிளக்கின் முத்துச்சுடர் கூட உங்கள் மனதை ஒருமுகப் படுத்திவிடும். எனக்குப் பிடித்தது எல்லாவற்றையும் நெருப்பில் போட்டு விடுகிறேன். எனக்குப் பிடித்தது என்று இவ்வுலகில் எதுவும் இல்லை என்று வழிபட்டால் போதும். நெருப்பு மிக எளிதாக மனதை மாற்றும் சாதனம் ஆகும்.

## ஜூலை மாத ராசிபலன்கள் - 2019



குருபகவானை ராசி நாதனாகக் கொண்ட மீனம் ராசிக்காரர்களே. ஐந்தாம் வீட்டில் செவ்வாய் நீசமடைந்து புதனோடு இணைகிறார். 9ஆம் இடத்தில் குரு செவ்வாய் புதனை பார்வையிடுகிறார். சுக்கிரன் 4ஆம் வீட்டில் இருப்பதால் வசதிகள் அதிகரிக்கும்.




பாக்ய ஸ்தானத்தில் குரு இருந்தாலும் பத்தில் சனி கேது சேர்ந்திருப்பதால் சில குடைச்சல்களை உடன் வேலை செய்பவர்கள் கொடுப்பார்கள். குரு நல்ல இடத்தில் இருப்பதால் எத்தனை இடைஞ்சல்கள் வந்தாலும் அதை சமாளிக்கும் தைரியத்தை கொடுப்பார். சுப செய்திகள் தேடி வரும். சிற்பிகள், கோவில் திருப்பணிகள் தேடி வரும். படிக்கும் மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் இருக்கும். போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த அளவு மதிப்பெண் வரலையே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருப்பீர்கள்.

படிப்பில் கவனம் தேவை ஆறாம் இடத்து சூரியன் நான்காம் வீட்டில் இருப்பதால் குல தெய்வ வழிபாடு செய்யுங்கள். மிக மிக அவசியம். பழனி முருகனை வழிபடுங்கள் வெற்றிகளை உருவாக்கித்தரும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த வேலை வாய்ப்பு கிடைக்கும். அம்மன் வழிபாடு அவசியம் தேவை. பிரச்சினைகள் தீர்ந்து நன்மைகள் நடைபெறும் சுப காரியங்கள் நிறைய நடைபெறும். சுப பயணங்கள் செய்யலாம். மொத்தத்தில் மீன ராசிக்காரர்களுக்கு மன மகிழ்ச்சியை தரக்கூடிய மாதம் ஜூலை மாதம்.

## கையில் எந்தவகை கயிறு கட்டினால் என்ன பலன் கிடைக்கும்?



கையில் கயிறு கட்டுவதால் தீய சக்திகளில் இருந்து விடுப்பட முடியும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. பொதுவாக மஞ்சள், கருப்பு, சிவப்பு என பல்வேறு நிறங்களில் கோயிலில் தரும் கயிறு கட்டுவது வழக்கம்.

கையில் கயிறு கட்டுவதனால் நமக்கு பல வகை நன்மைகளை ஏற்படுத்துகின்றது. எம்முடைய மணிக்கட்டு இடத்தில் கயிறு கட்டினாலும் அல்லது காப்பு போடுவதாலும் நாடியின் இயக்கம் சீராகிறது. எண்ணங்களும், மனநிலையும் அலைபாயாமல் இருக்கும் என அறிவியல் ரீதியாக கூறப்படுகின்றது.

கயிறு கட்டினால் என்ன பலன் கிடைக்கும் என்பதை பற்றி இங்கு பார்ப்போம்.

**பட்டு நூலினாலான காப்பு கயிறு**

குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரும் அணிந்து கொள்ளலாம். நாம் அணியும் காப்பு கயிறு மந்திர ஆற்றலை சேமித்து நம்மை காக்கும்.

**சிவப்பு நிறத்தில் கயிறு**

நீண்ட ஆயுள் மற்றும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும். கருப்பு நிறக்கயிறைக் கட்டுவதால் தீயவற்றின் பார்வையிலிருந்து விடுபடலாம். இதை குழந்தைகள் இடுப்பில் கட்ட கண் திருஷ்டி விலகும்.

**ஆரஞ்சு அல்லது காவி நிறக்கயிறு**

இந்த கயிறை மணிக்கட்டில் கட்டுவதால் புகழ், அதிகாரம் சேரும். இத்தகைய காப்பு கயிறை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணிவது சிறப்பு.

காசிக்கயிறு

இந்த வகை கயிறு முருகன், பிள்ளையார், சிவன், திருப்பதி போன்ற தெய்வங்களின் டாலர்களை கோர்த்து கழுத்தில் மாலையாகவும் அணிவார்கள். **இதுவும் ஒரு வகையில் தீய சக்திகளிடமிருந்து நம்மை காப்பதே ஆகும்.**

## சுக்ரன் பெயர்ச்சிப் பலன்கள்





சுக்ரன் என்றால் இன்பம். மனித வாழ்க்கையில் அன்பு, பாசம், காதல் ஆகிய மூன்று இன்பங்களை அளிக்கக் கூடியவர். சுக்கிரன் சுக போகங்களின் அதிபதி. களத்திரகாரகன் சுக்கிரன் வாழ்க்கைத் துணையை அமைத்துக் கொடுப்பவர். ஆகையால் சுக்கிரன் நமது ஜாதக கட்டத்தில் நல்ல யோக அம்சத்துடன் இருப்பது அவசியம். இவருடைய தசா காலமான 20 வருடங்களில் மிகப்பெரிய ராஜ யோக பலன்கள் உண்டாகும்.

பூவுலகில் நாம் அனுபவிக்கின்ற அனைத்து வகையான இன்பங்களுக்கும் காரகன் "சுக்கிர பகவான்" ஆவார். இந்த சுக்கிர பகவான் ஜூன் மாதம் 29 ஆம் திகதி நள்ளிரவு 01.47 மணியளவில் "ரிஷப" ராசியிலிருந்து "மிதுன" ராசிக்கு பெயர்ச்சியாகியுள்ளார். இந்த பெயர்ச்சியால் 12 ராசியினருக்கும் ஏற்படக்கூடிய பலன்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

**சிம்மம்:**

சிம்ம ராசிக்கு 11ஆம் இடமாகிய மிதுன ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் உடலாரோக்கியம் அடிக்கடி பாதிக்கப்படும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். பிறருடன் வீண் விவாதங்களில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. தொழில் மற்றும் வியாபாரங்கள் சராசரியான நிலையில் இருக்கும். எந்த ஒரு விடயமும் சற்று தாமதத்திற்கு பின்பே நிறைவேறும். பெண்கள் வழியில் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:**

கன்னி ராசிக்கு 10ஆம் இடமாகிய மிதுன ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் உடல் ஆரோக்கியம் மேம்படும். வேலை தேடி அலைந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரங்களில் எதிர்பார்த்த லாபம் இருக்கும். அரசியலிலிருப்பவர்கள் பதவிகள் கிடைக்க பெறுவார்கள். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் பணவரவு உண்டாகும். குடும்பத்திற்கு ஆடம்பர பொருட்களை வாங்கும் அமைப்பு ஏற்படும்.

**துலாம்:**

துலாம் ராசிக்கு 9ஆம் இடமாகிய மிதுன ராசிக்கு சுக்கிரன் பெயர்ச்சியாகியிருப்பதால் உடல்நலம் மிக சிறப்பாக இருக்கும். உங்களின் தொழில் வியாபாரகளில் நல்ல இலாபம் கிடைக்கும் . பெண்களுக்கு நல்ல வரன்கள் அமையும். குடும்பத்தில் பல மங்கல நிகழ்வுகள் நடக்கும். சிலருக்கு புத்திர பேறு கிட்டும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும்.

(தொடரும்)

# நா.முத்துக்குமார் தன் மகனுக்கு எழுதிய அனுபவக் கடிதம்



அன்புள்ள மகனுக்கு, அப்பா எழுதுவது. இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கிறாய். உன் மொழியில் உனக்கு எழுத, நான் கடவுளின் மொழியை அல்லவா கற்க வேண்டும். பின்னாளில் இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்துப் பார். உன் தகப்பன் உனக்குச் சேர்த்த ஆகப்பெரிய சொத்து இதுதான் என உணர்வாய்.

என் ப்ரியத்துக்குரிய பூக்குட்டியே! உன் மெத்தென்ற பூம்பாதம் என் மார்பில் உதைக்க... மருத்துவமனையில் நீ பிறந்ததும் உனை அள்ளி என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங்கையில் கிடப்பதை; குறுகுறு கை நீட்டி என் சட்டையைப் பிடித்து இழுப்பதை; கண்ணீர் மல்கப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

உலகிலேயே மிகப்பெரிய இன்பம் எது, தாய் மடியா? காதலியின் முத்தமா? மனைவியின் நெருக்கமா? கொட்டிக்கிடக்கும் செல்வமா? எதுவுமே இல்லை. `தம் மக்கள் மெய்த் தீண்டல் உயிருக்கு இன்பம்' என்கிறார் வள்ளுவர். நீ என் மெய் தீண்டினாய், மெய்யாகவே மெய்யாகவே நான் தூள் தூளாக உடைந்து போனேன். உன் பொக்கைவாய் புன்னகையில் நீ என்னை அள்ளி அள்ளி எடுத்து மீண்டும் மீண்டும் ஒட்டவைத்துக்கொண்டிருந்தாய்.


நீ அழுதாய்; சிரித்தாய்; சிணுங்கினாய்; குப்புறக் கவிழ்ந்து, தலை நிமிர்ந்து, அந்தச் சாகசத்தைக் கொண்டாடினாய், தரையெல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய். தகப்பன் கைவிரல் பிடித்து எழுந்தாய். நீயாகவே விழுந்தாய். தத்தித் தத்தி நடந்தாய். தாழ்வாரம் எங்கும் ஓடினாய். மழலை பேசி, மொழியை ஆசீர்வதித்தாய்.

என் பொம்முக்குட்டியே! இந்த எல்லா தருணங்களிலும் நீ நம் வீட்டுக்கு இறைவனை அழைத்து வந்தாய். என் செல்லமே! இந்த உலகமும் இப்படித்தான். அழ வேண்டும், சிரிக்க வேண்டும், சிணுங்க வேண்டும், குப்புறக் கவிழ்ந்து, பிறகு தலை நிமிர்ந்து, அந்தச் சாகசத்தைக் கொண்டாட வேண்டும்.

தரையையெல்லாம் தனதாக்கித் தவழ வேண்டும்; எழ வேண்டும்; விழ வேண்டும். தத்தித் தத்தி நடக்க வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத் தான் நீ வெவ்வேறு வடிவங்களில் நடிக்க வேண்டும்.

என் சின்னஞ்சிறு தளிரே... கல்வியில் தேர்ச்சிகொள். அதே நேரம், அனுபவங்களிடமிருந்து அதிகம் கற்றுக்கொள். தீயைப் படித்துத் தெரிந்துகொள்வதைவிட, தீண்டி காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும். இறக்கும் வரை இங்கு வாழ, சூத்திரம் இதுதான், கற்றுப்பார். உடலைவிட்டு வெளியேறி, உன்னை நீயே உற்றுப்பார்.'

# ஜப்பான் கலைஞர்களுடன் இணைந்து சிவா நடிக்கும் அடுத்த படம் 'சுமோ'



'சென்னை 28 2', 'கலகலப்பு 2', 'தமிழ் படம் 2' என நகைச்சுவை படங்களில் நடித்து வந்த சிவா, வெங்கட் பிரபு இயக்கத்தில் 'பார்ட்டி' படத்தில் நடித்து முடித்துள்ளார். ஆனால், அந்தப் படம் திரைக்கு வருவது தாமதமாகி இருக்கிறது. இதைத் தொடர்ந்து, நகைச்சுவை கதைகளைக் கேட்டு வந்த சிவா, இப்போது 'சுமோ' என்ற படத்தில் ஒப்பந்தமாகி நடித்துவருகிறார். 'வணக்கம் சென்னை' படத்துக்குப் பிறகு, ப்ரியா ஆனந்த் இவருக்கு ஜோடியாக நடிக்கிறார்.

'பிப்ரவரி 14', 'ஆயிரம் விளக்கு' படங்களை இயக்கிய ஹோசிமின் இந்தப்" படத்தை இயக்குகிறார். இந்தப் படத்தின் பெரும்பான்மையான காட்சிகளின் படப்பிடிப்பு ஜப்பானில் நடைபெற்று முடிந்துள்ளது. இந்தப் படத்தில் யோகிபாபு, விடிவி கணேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

ஜப்பானில் புகழ்பெற்ற 'சுமோ' விளையாட்டை மையப்படுத்தி இருக்கும் இந்தப் படத்தில் நிறைய சுமோ விளையாட்டு வீரர்களும் நடித்துள்ளனர். இந்த வருட இறுதிக்குள் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளது படக்குழு.




twitter

செந்திலின்_கிறுக்கல்கள் @Anngiinpillai



மனிதன் சோம்பலாக இருந்து நாள் வேகமாக நகர்வது ஞாயிற்று கிழமைக்கே உண்டான தனி டிசைன் தான்!

ச ப் பா ணி@manipmp




இரவில் கதை கேட்டு தூங்கிய குழந்தைகளை விட கதை பிடிக்காமல் தூங்கிய குழந்தைகளே அதிகம்

Selva Bharathi@asdbharathi




பெண் குழந்தைகளுக்கு அறிவைக் கொடுங்கள். அழகு தானே வரும்.









## அந்தியேட்டிக்கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 23.06.2019 அன்று
இறைவனடி சேர்ந்த எம் குலவிளக்கு

**அமரர்**
**சிவப்பிரகாசம்**
**தேவேந்திரராஜா**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (21.07.2019) கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. அவரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நாளை (23.07.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மந்துவில் மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

*(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)*

**குடும்பத்தினர்**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.06.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது
குடும்பத்தலைவி

**அமரர் சண்முகம் மகாலட்சுமி**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.07.2019) திங்கட்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


*(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

**இல.10, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை



மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு டச்சுவீதி சோலையம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கணபதிப்பிள்ளை நேற்று (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் குமாரசாமி மற்றும் காலஞ்சென்றவர்களான இலகுநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான பிள்ளைமுத்து. ஆறுமுகம் செல்லத்தம்பி. நாகராசா. இராசம்மா மற்றும் சிவப்பிரகாசம், தங்கம்மா, சின்னம்மா, சிவகுருநாதன், ருக்குமணிதேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருச்செல்வம். சந்திரலீலா. இராஜலக்ஷ்மி. இராஜகுலசிங்கம். அருளாநந்த ராசா. அகிலேஸ்வரி. கருணாமூர்த்தி. பரமேஸ்வரன் (தயா). கணேசமூர்த்தி (சுரேஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சித்திராதேவி, கனகலிங்கம், சூரியகுமார், காலஞ்சென்றதயாரூபி மற்றும் ரட்ணரூபா, தயாளன், சிவறஞ்சினி, அபர்னா, அசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.07.2019) ஞாயிற்றுக்கிழமைசாவகச்சேரி வடக்கு டச்சு வீதி, மண்டுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் பட்டது .இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**அருள்விநாயகர் மோட்டர்ஸ், அருள்நிலா நகைமாடம்**
**077 917 9427, 077 414 6425, 077 305 3030**
**077 710 6042**

**சாவகச்சேரி வடக்கு,**
**டச்சுவீதி, மண்டுவில்.**

# மாற்றம் பெற வேண்டியது யார்?

ஒரு ஊரில் ஒரு செல்வந்தன் இருந்தான். அவனுக்குக் கடுமையான தலைவலி ஏற்பட்டது. பல ஊர்களிலிருந்து மிகப் பெரிய மருத்துவர்கள் வந்து பார்த்தும் தலைவலி குணமாகவில்லை.

ஒருநாள் அந்த ஊருக்கு ஒரு சன்னியாசி வந்தார். அவர் செல்வந்தனை வந்து பார்த்தார். அவனுக்கு ஏற்பட்ட தலைவலிக்குக் கண்ணில் இருக்கும் ஒரு நோயே காரணம் என்றும், அதைக் குணப்படுத்த பச்சை நிறத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கக்கூடாது என்றும் கூறி விட்டுப் போய்விட்டார்.



பணக்காரன் முதலில் தன் வீட்டில் இருக்கும் எல்லாவற்றையும் பச்சையாக மாற்றினான். தலைவலி குணமாகி விட்டது. சன்னியாசி கூறியது சரிதான். உடம்பு சரியாகவே வீட்டை விட்டு வெளியே போகத் தொடங்கினான். வெளியே போனால், இயற்கை எல்லா வண்ணங்களையும் அள்ளித் தெளித்திருந்தது. ஆனால், அவற்றைத்தான் அவன் பார்க்கக்கூடாதே!

பச்சைப் பெயிண்டையும், பிரஷ்ஷையும் வாங்கிக் கொடுத்து, பல வேலையாட்களை வைத்து அவன் போகும் வழியில் இருக்கும் ஆடு, மாடு, மனிதர், குடிசை, வண்டி, மேசை, நாற்காலி எல்லாவற்றுக்கும் பச்சை நிறத்தை அடிக்கச் சொல்லிவிட்டான். கொஞ்ச நாளில் அவன் போகும் வழியில் எல்லாம் பச்சை நிறமாக காட்சியளித்தன.

சில மாதம் கழித்து சன்னியாசி அந்த ஊருக்குத் திரும்பி வந்தார். செல்வந்தனின் ஆட்கள் அவருக்கும் பச்சை நிற பெயிண்டை அடிக்கப் போனார்கள். அவர், "உங்கள் முதலாளியிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்" என்றார். அவர்களும் அழைத்துச் சென்றனர்.


செல்வந்தன் சன்னியாசியை மகிழ்ச்சியோடு வரவேற்றான்.

"இந்த ஊரில் எல்லாவற்றுக்கும் ஏன் பச்சைப் பெயிண்ட் அடிக்கிறீர்கள்?" என்று சன்னியாசி கேட்டார். "நீங்கள் தானே நான் பச்சை நிறத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கக்கூடாது என்றீர்கள். அதனால் தான் அப்படிச் செய்தேன்" என்றான் செல்வந்தன்.

சன்னியாசி சிரித்து விட்டு, "ஒரு நூறு ரூபாய் கொடுத்து, பச்சைக் கண்ணாடி வாங்கி அணிந்திருந்தால், உன்னைச் சுற்றியிருக்கும் பொருள்களெல்லாம் பிழைத்திருக்கும். உன் பணமும் வீணாகி இருக்காது. உலகம் முழுமைக்கும் உன்னால் பச்சை பெயிண்ட் அடிக்க முடியுமா?" என்றார்.

எம்மில் பலரும் இந்தக் கதையில் வரும் செல்வந்தனைப் போலத்தான் இருக்கிறோம். எம்மைத் திருத்திக் கொள்வதற்குப் பதிலாக, உலகத்தை மாற்ற முயற்சிக்கிறோம். அது சாத்தியமல்ல. திருந்த வேண்டியது நாமே.

# வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



## கொக்கரக்கோ சேவலே

கொக்கரக்கோ சேவலே
கொண்டையாட்டும் சேவலே
கொத்தித் தின்ன நெல்லு தாரேன்
குதித்து குதித்து ஓடிவா

அண்டை வீடு செல்லாதே
தொந்தரவு செய்யாதே!
வேலி தாண்டிப் போகாதே
வீண் வம்பைத் தேடாதே!

எமது வீட்டுத் தோட்டத்தில்
மகிழ்ச்சியாய் திரிந்திடு
நான் பள்ளி சென்று வரும்வரை
பத்திரமாய் இருந்திடு!

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள இரு ஹொட்டல்களிற்கு மேற்பார்வையாளர், Room boy தேவை.

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

★ சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.

**077 343 8373, 077 177 5230**

## மரண அறிவித்தல்



மண்ணில் 05 . 02 . 1948

விண்ணில் 21 . 07 . 2019

### திருமதி சிவக்கொழுந்து குலசபாநாதன்

(கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு)

கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து குலசபாநாதன் நேற்று (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை குலசபாநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர், சோதிடர்) - சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், கு. நிரஞ்சன் (QS.Dubai), த.சோபனா, (பற்சிகிச்சையாளர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - பருத்தித்துறை), சி. விதுர்சன் (ஆசிரியர் - German Tech - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயும், சுனித்தா, தயாபரன் (கணக்காளர் - தேசிய நீர்வழங்கல் அதிகாரசபை), சுதர்சனா ஆகியோரின் அன்பு மாமியும், கிருத்திக், ரிசானி, சங்கீத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மா. புவனேஸ்வரி, திருமதி உ.கமலம், திரும்தி ஸ்ரீ இரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி), ஆ.ராஜேந்திரன் (ஓய்வுபெற்ற மாகாணக் கல்விப் பணிப்பாளர்), ஆ.கந்தசாமி (கனடா), ஆ.மாயவன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 18 . 07 . 1964

சந்நிதியான் திருவடியில் 20 . 07 . 2019

### திருமதி குமுதினி சந்திரகாந்தன்

(அதிபர், பிரதிப்பணிப்பாளர், விவசாயக் கல்லூரி, வவுனியா)

கற்கோவளம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, தாண்டிக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குமுதினி சந்திரகாந்தன் (அதிபர், பிரதிப்பணிப்பாளர், விவசாயக் கல்லூரி, வவுனியா) 20.07.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - இராஜசோதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சி.கணபதிப்பிள்ளை மற்றும் க.சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளை சந்திரகாந்தன் (ஓய்வு பெற்ற பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை) இன் அன்பு மனைவியும், திருமதி க.நந்தினி (Resident Engineer, RIDEP Project-NP), திருமதி அ.மாதினி (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம், கல்லடி, மட்டக்களப்பு), ம.ராஜ்குமார் (ஆசிரியர், மட்டக்களப்பு), ம.சிவக்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனியா, வருகைதரு போதனாசிரியர்/தொழில்நுட்பக்கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரமோகன் (கனடா), சந்திரநேசன் (கனடா), Dr. சந்திரசிலோசனா விபுலானந்தன், நந்தினி (கனடா), மாலதி (கனடா), வை.கமலதாசன் (பொறியியலாளர்), மை.அன்ரனி (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகர சபை, ஏறாவூர்), திருமதி ரா.ரஞ்சனி (ஆசிரியை, மட்டக்களப்பு), திருமதி சி.சுஜந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரகதீஸ்வரன் (Univ. of Moratuwa), சிவசாம்பவி, சிவசாமளை, ஹரிசயன், ஹரினிகா ஆகியாரின் அன்பு மாமியும், சாளினி (கனடா), ஜனகன் (கனடா), கபிலன்(கனடா), சோபிகா (கனடா), மிலேஸ் (கனடா), ரஞ்சனி, திவானா ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2019) திங்கட்கிழமை வவு/ஓமந்தை அரச உத்தியோகத்தர் வீட்டுத்திட்டத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வவு/பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

AR, 2nd Lane,
Govt.Officer's Housing Scheme
Omanthai, Vavuniya

தகவல்:
**அன்புக் கணவர் மற்றும் குடும்பத்தினர்.**

**077 312 7968 (கணவர்)**

# கண்ணீர் அஞ்சலி

**எமது நிறுவனத்தில் பல வருடங்களாகக் கொள்வனவாளராகவும், கணக்காய்வாளராகவும்** கடமையாற்றிய

## இராசதுரை விஜயரத்தினம்

அவர்கள் 19.07.2019 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்ினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 21.07.1946 மறைவு 19.07.2019

| S.V.முருகேசு | S.V.M. Pvt Ltd | S.V.முருகேசு |
|---|---|---|
| 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | 122, டாம் வீதி, கொழும்பு - 12 | A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. |

**S.V.M. நிறுவனத்தின் உரிமையாளரும், ஊழியர்களும்**

## தேர்தல் ஆணைக்குழு

# வாக்களிப்பதற்கு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்

**தேருநர் இடாப்புக்களின் மீளாய்வு - 2019**

**பாதியளவில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றதும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறாததுமான பிரதேசங்களில் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்காக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான விசேட அறிவித்தல்**

வடமாகாணத்தில் கீழ்க்காணும் கிராம அலுவலர் பிரிவுகளில் உண்மையாக வதிகின்றவர்களின் பெயர்களை 2019 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்படும் தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக விண்ணப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இந்த விண்ணப்பப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் ஏற்கனவே வதிந்துள்ளவர்கள் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், ஏனைய மாவட்டங்களில் வதிந்துள்ளவர்கள் அந்தந்த மாவட்டத் தேர்தல் கள் அலுவலகங்களிலிருந்து குறித்த விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்விண்ணப்பப் பத்திரங்கள் 22.07.2019 ஆம் திகதியிலிருந்து 15.08.2019 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென்பதுடன், விண்ணப்பப் பத்திரத்தை சரியாகப் பூர்த்தி செய்து, ஏற்கனவே தாங்கள் வதிந்துள்ள பிரிவின் கிராம அலுவலரின் பரிந்துரையுடன் குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதிவு அலுவலருக்கு 15.08.2019 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும்.

அத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் வதிந்திருந்த தற்சமயம் தொழில் / கல்வி / வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளவர்களின் தகவல்களையும் குறித்த விண்ணப்பப் பத்திரத்தில் உட்சேர்த்துடு, அவரது நெருங்கிய உறவினரொருவர் / அட்டர்னி அதிகாரியொருவரினால் கையொப்பமிட்டு 15.08.2019 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கையளித்தல் வேண்டும்.

| மாவட்டத்தின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் | கிராம அலுவலர் பிரிவின் பெயர் | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பளை | J/ 226 நகுலேஸ்வரம், J/233 காங்கேசன்துறை, J/ 234 காங்கேசன்துறை மத்தி, J/235 காங்கேசன் துறை தெற்கு, J/238 கட்டுவன், J/240 தென்மயிலை, J/241 வருத்தலைவிளான், J/242 குரும்ப சிட்டி, J/243 குரும்பசிட்டி கிழக்கு, J/244 வசாவிளான் கிழக்கு, J/245 வசாவிளான் மேற்கு, J/246 மயிலிட்டி வடக்கு, J/248 மயலிட்டி தெற்கு, J/ 249 தையிட்டி வடக்கு, J/250 தையிட்டி மேற்கு, J/251 மயிலிட்டித்துறை வடக்கு, J/252 பலாலி தெற்கு, J/253 பலாலி கிழக்கு, J/254 பலாலி வடக்கு, J/255 பலாலி வடமேல், J/256 பலாலி மேற்கு. | | |
| கிளிநொச்சி | கண்டாவளை | KN 46 ஆனையிறவு | | |
| | பச்சிலைப்பள்ளி | KN 92 இத்தாவில் | KN 93 முகமாலை | KN 94 வேம்பொடுகேணி |
| மன்னார் | முசலி | MN 153 முல்லிக்குளம் | | |

**www.elections.gov.lk** எனும் தேர்தல் ஆணைக்குழு இணையத்தளத்திலிருந்தும் குறித்த விண்ணப்பப்பத்திரத்தை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

தொலைபேசி இல : 011 - 2868441, 42, 43
மின்னஞ்சல் முகவரி : info@elections.gov.lk
இணையத்தளம் : WWW.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய,
22.07.2019

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2369437 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2369438 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 0342222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 0242222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 0662222422 | முல்லைத்தீவு | 021-2061426 | மொணராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருக்கோணமலை | 026-2222304 | | |

சரியாகப் பதிவு செய்துகொள்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்

---


## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிய பணிப்பெண் ஒருவர் தேவை.

**077 262 6944**

---

# சபிண்டீகரண அழைப்பு



கடந்த 23.06.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சின்னத்தம்பி வீரசிங்கம்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் நாளை (23.07.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெறவுள்ளது. இந் நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு சமுகமளித்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**அந்திரான்,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.**

**குடும்பத்தினர்
077 079 7635**

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சண்முகநாதன் பிரசாத்**

**தோற்றம் 05.11.1993**
**மறைவு 07.07.2013**

எங்கள் செல்வமே பிரசாத்
இன்றுடன் ஆண்டுகள் ஆறு முடிந்த போதிலும்
எங்கள் நெஞ்சங்களில் தினமும்
வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றாய்
நீர்வீழ்ச்சியில் நீர் ஓடிக்கொண்டே இருக்கும்
எங்கள் இதயத்தில் உன் நினைவு என்னும்
ஊற்று ஓடிக்கொண்டே இருக்கிறது.
இதை நீ அறிவாயா? எம் செல்வமே! பிரசாத்
உன் புன்னகை முகம் பார்த்திடவும்
உன் குரல் கேட்டிடவும் எம் இதயம் துடிக்கிறதே
கடலில் நதி எப்படி கலக்கிறதோ
அதேபோல் நான் உன்னுடன் வந்துசேர்வது எப்போது?
என் உயிர்ச்செல்வமே! பிரசாத்.

**பத்திரகாளி கோவிலடி
பொலிகண்டி கிழக்கு
வல்வெட்டித்துறை**

**உன் பிரிவால் துயருறும்
சிறியதாய் (சோதிமலர்)
பெற்றோர், அண்ணன்மார், பெறாமக்கள்**

---

## மரண அறிவித்தல்

# திருமதி நாகேஸ்வரி சிவஞானம்



மனம் மகிழ 19.05.1960
மனம் நெகிழ 18.07.2019

கொயிலாமனை கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி சிவஞானம் 18.07.2019வியாழக்கிழமைஇறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பகீரதி தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் சின்னத்தங்கம் தம்பதி களின் அன்பு மருமகளும் சிவஞானத்தின் அன்புமனைவியும் குமுதினி, முகுந்தினி, றயந்தினி ,உஷாறமணன் காலஞ் சென்ற நிஷாந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கனகரத்தினம், இரவிச்சந்திரன், சிறி குமரன், றாமசத்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் , பவித்திரா, கவித்திரா, சாருஷன், கனிஸ்கா, தர்மினா, அபின், அபினா, தனுஸ்,அகிஸ்னா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கார்த்திகேசு, சிவகாமி, லலிதாதேவி, கனகரத்தினம்,ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சின்னப்பிள்ளை , பத்மாவதி , இராசலிங்கம், சரஸ்வதி, சின்னத்துரை ,இராசேஸ்வரி, தங்கராசா, ரவிதாஸ், மகாலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2019) திங்கட்கிழமை மு.ப. 11.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொயிலாமனை (சோனகமபிளவு) இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.
077 322 3015**

---

## மரண அறிவித்தல்

# திருமதி சிந்தாமணி ராமு



யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிந்தாமணி ராமு 19.07.2019 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ் சென்ற ராமுவின் அன்பு மனைவியும், சாந்தபவானி, காலஞ்சென்ற குமார் மற்றும் சாந்தரூபன், ராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் பூரணகாந்தி, காலஞ்சென்ற பூப்பிள்ளை மற்றும் உலகேஸ்வரி, மனோன்மணி, கமலாதேவி, சோதிலிங்கம், காலஞ்சென்ற விஜயதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுமாரன், ராணி, சாந்தி, அனுராதா ஆகியோரின் அன்பு மாமியும், சிவரஞ்சன் - யசிதா, தர்ஷினி - ஸ்ரிவன்சன், ரம்யா, ரமேஸ், நேதன், அக்சயா, பிரதீபன், பிரசாந்தன், பிரசாந், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாய்பிரவி, ஜானுஷ், ஹன்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2019) திங்கட்கிழமை உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் உரும்பிராய் எருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(AC/10300)(11.17)

**தகவல்: குடும்பத்தினர்.**

ரூபன் (மகன்) - +16474004166), ராஜ் (மகன்) - +447949890436), சிவகுமாரன் (மருமகன்) - +447853342821

---

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை- 2019

01. தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வேலைகளுக்காக கோருகின்றார்

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700, 021-3142841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர் பெறுகைக்குழு நல்லூர் பிரதேசசபை. 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் இடத்திலிருந்து 2019.07.22 ஆம் திகதியிலிருந்து 2019.08.05 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை. 14/5 கருவப்புலம் வீதி. கொக்குவில் என்னும் முகவரிக்கு 2019.08.06 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது 2019.08.06 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கோரப்பட்ட வேலைக்கான கேள்விகளுக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து 63 நாட்கள் ஆகும்.

09. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

| இல | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) | கேள்வி பிணை வைப்பு காலம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வராகியம்மன் கோவில் வீதி காப்பெற் வீதியாக புனரமைத்தல் (NP/14//41/(10)4/02/PSDG /2019-1) | 3.45 | 2,000.00 | C8/C7 | 50,000.00 | 04.11.2019 | 60 நாட்கள் |

10. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2019.07.30 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

தலைவர்
பெறுகைக்குழு
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.
2019.07.22

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை சாரையடியில் அமைந்துள்ள (யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியிலிருந்து (20 m. இல்) 6.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பரப்பு - 1500,000 /=

077 843 5397

ராசி அதிர்ஷ்டம்

திகதி 21.07.2019 | வெற்றி வாரம் 2565 | வர்ணம் ஊதா

சிம்மம்

வெற்றி இலக்கங்கள் 01 10 25 36

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,234,406/=

23.07.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி ஷனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 470 சீட்டிழுப்பு திகதி: 2019.07.19

வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை

T 38 57 58 80

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1008

சீட்டிழுப்பு திகதி 2019.07.20 சனிக்கிழமை

O 02 08 39 68

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 676

வர்ணம் : இளநீலம்

சீட்டிழுப்பு திகதி: 2019.07.21

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 71,922,590/-

வெற்றி இலக்கங்கள் 18 21 61 73 E

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ES Printers


357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472

esprintersjaffna@gmail.com

# மரண அறிவித்தல்

# கந்தையா நடராசா



தோற்றம் 30.04.1937 இறப்பு 21.07.2019

சரசாலை வடக்கை பிறப்பிடமாகவும், இல. 15/16, சங்கிலியன் வீதி நல்லூரை தற்போதய வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று (21.07.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேரந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் கனகம்மாவின் அன்புக்கணவரும் சுப்பிரமணியம், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தங்கம்மா, மார்க்கண்டு, இராசையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமுதினி, அன்பரசன் (சுவிஸ்), அகலினி (ஜேர்மன்), அருந்தினி (ஆசிரியர், யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்), அகிலரசன், அஜந்தினி (லண்டன்) அருளரசன் (லண்டன்), ஆகியோரின் அன்புத்தந்தையும் இரவீந்திரன் (Ravee Enterprises), பாமினி (சுவிஸ்), பாலச்சந்திரன் (ஜேர்மனி), குருபரன் (Ambika Dispensary) , சிவதாசன் (லண்டன்), சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிசாந்தன் (R.N Builders), சங்கீதா (ஆசிரியர், யாழ்/இந்துக்கல்லூரி), வைஸ்ணவி (NTB Jaffna), அபிநயன், ஆதவன், அக் ஷயா (சுவிஸ்), நிகேஷ் , நியூரிசா (ஜேர்மனி), பிறையொளி, தாரகி (மாணவிகள், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஷாண், ஷைலி, திவ்யா, கிருத்விக் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் தமன்யா, மிதுன்யா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.07.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணியளவில் இல.15/16 சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் சரசாலை வடக்கு கொம்பிக்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**15/16, சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 291 5318, 077 544 6476**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## யாழ்ப்பாண ஆயரின் நல்லெண்ணத்தை மன்னார் ஆயரும் வெளிப்படுத்துவாரா?

ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுக் குண்டுத் தாக்குதலின் பின்னர் இலங்கையில் சிங்கள – பௌத்த தேசியவாதம், ஏனைய இனங்கள், மதங்களுக்கு எதிரான தனது அடக்குமுறையைதீவிரப்படுத்தியிருக்கின்றது. ஆரம்பத்தில் முஸ்லிம்கள் என்ற இனத்தின் – மதத்தின் மீதான அடக்குமுறையாக ஆரம்பித்து தற்போது, இந்துக்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பில் வந்து நிற்கின்றது.

இலங்கைத்தீவு சிங்கள – பௌத்தர்களுக்கு மாத்திரம் உரியது என்றகருத்து தொடர்ந்தும்கூறப்பட்டு வருகின்றது. பிக்குகள் இந்தக்கருத்தைக்கக்கி வருகின்றனர். அவர்களின்கருத்துக்கு எதிர்வினை எதனையும் அரசு ஆற்றவில்லை. ஆற்றவும் தயாரில்லை. மாறாக அதனை ஊக்குவிக்கும் வகையிலேயே நாட்டின் தலைவர்களின் செயற்பாடுகளும் இருக்கின்றது.

நாட்டில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கும் தமிழர்கள், சிங்கள – பௌத்த தேசியவாதத்தை எதிர்கொள்வதற்கு ஓரணியில் நிற்கவேண்டிய சூழல் இது. ஆனால், தமிழர்களும் மத ரீதியாகப் பிளவுபட்டு நிற்கும் நிலமை ஏற்பட்டது துரதிஷ்டமே.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் வளைவு உடைக்கப்பட்டமை, அது மீண்டும் அமைக்க வழங்கப்பட்ட அனுமதி மீளப்பெறப்பட்டமை என்பனதமிழர்களின் மத ரீதியான பிளவை கூர்மைப்படுத்தியுள்ளது. இந்தப் பிளவை சரி செய்வதற்குப் பதிலாக இன்னமும் அதனை ஆழப்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுவது வேதனையானது.

மன்னார்திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு மாந்தைச்சந்தி ஊடாகச் செல்லும் நுழைவாயிலில் அமைக்கப்பட்ட வளைவு கடந்த மார்ச் மாதம், சிவராத்திரிக்கு முதல் நாள் உடைத்தெறியப்பட்டது. இந்தச்செயலில் நேரடியாககிறிஸ்தவ மக்களும், அருட்தந்தையர்களும் தொடர்புபட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தை யாழ்ப்பாண மறைமாவட்டத்தினர். உடனடியாகக் கண்டித்திருந்தனர். இருப்பினும் பின்னர் சில பல காரணங்களால் தமது முன்னைய அறிக்கையிலிருந்து பின்வாங்கியிருந்தனர்.

இந்தவளைவு விவகாரம் நீதிமன்றம் வரையில் சென்றதுடன், தமிழ் மக்களிடையே மத ரீதியான பிளவை வலுவடையச் செய்தது. மன்னார் பிரதேச சபை வளைவு அமைப்பதற்கான அனுமதியை பின்னர் வழங்கியிருந்தது. ஆனால், மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ, பிரதேச சபைத் தவிசாளரை தனது ஆயர் இல்லத்துக்கு அழைத்து வழங்கிய அனுமதியை இடைநிறுத்தப் பணித்திருந்தார். அதற்கு அமைவாக பிரதேச சபை, அனுமதியை மீளப்பெற்றிருந்தது. இந்த விடயம் இந்து மக்களிடையே கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்ப்பாண ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், இன்றைய சூழலில் சைவ மக்களும் கத்தோலிக்க மக்களும் ஒற்றுமையாக இருப்பது எமக்குநன்மையாகும். திருக்கேதீச்சரவளைவு உடைக்கப்பட்டமை கவலைக்குரியது. எனது பகுதியாக இருப்பின் வரவேற்பு வளைவு கட்டுபவர்களை வரவேற்று என்ன உதவி வேண்டுமென்று கேட்டிருப்பேன். அவர்களுக்கு உணவும் வழங்கி ஒற்றுமையை வெளிக்காட்டியிருப்பேன். இதை விடுத்து பகையை வளர்ப்பது தவறு என்று இடித்துரைத்துள்ளார்.

யாழ்ப்பாண ஆயர் வெளிப்படுத்திய நல்லெண்ணத்துக்கு இந்து அமைப்புக்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளன. யாழ்ப்பாண ஆயர் கூறுவது போன்று தற்போதைய சூழலில், சைவ மக்களும் கத்தோலிக்க மக்களும் ஒன்றிணைவது காலத்தின் கட்டாயம். அதற்காக அவர் வெளிப்படுத்திய நல்லெண்ணத்தை, மன்னார் ஆயரும் புரிந்து கொள்ளவேண்டும். அதுவே இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரும். தமிழர்களின் ஒற்றுமையும் சிதையாமல் இருக்கும்.

மன்னார் ஆயராக இருந்த இராயப்பு யோசப் அவர்கள், தமிழ் மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர். தமிழ்த் தலைமைகளை ஓரணியில் கொண்டு வருவதற்காக அரும்பாடுபட்டவர். அப்படிப்பட்டவரின் இடத்தில் இருக்கும் தற்போதைய ஆயரும், அவரின் வழியில் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கவேண்டும். ஆகக் குறைந்தது, தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலையாமல் பாதுகாக்க வேண்டும்.

யாழ்ப்பாண ஆயர் வெளிப்படுத்திய நல்லெண்ணத்தை, மன்னார் ஆயர் பற்றிக் கொள்ளவேண்டும்.




# தமிழர் தொடர்ந்து பிளவுபட்டிருத்தல் இனியும் தகுமா?

இந்துமதி

வடக்குக் கிழக்குடன் மட்டுமே தமிழர்களின் உறவு மட்டுப்படுத்தப்படாது மலையகம் மற்றும் ஏனைய பகுதிகளிலும் நீடிக்கப்பட வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது. சிங்கள இனவாதிகளும் காவியுடையில் திரிபவர்களும் தமிழர்கள் அனைவரையும் இலக்கு வைத்துச் செயற்பட ஆரம்பித்துவிட்டதால் தமிழர்கள் அதை எதிர்கொள்வதற்குத் தம்மைத் தயார் செய்ய வேண்டிய அவசிய தேவையும் எழுந்துள்ளது.

தமிழர்கள் இந்து ஆலயங்களில் அமைதியாகவும் நிம்மதியாகவும் வழிபடுவதற்கு முடியாத நிலை உருவாகியுள்ளது. அந்த ஆலயங்களை அடாத்தாக பௌத்த விகாரைகளாக மாற்றுகின்ற அடாவடித்தனங்களும் இடம்பெற்று வருகின்றன. இதை அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் தட்டிக் கேட்கும்போது அடக்கி ஒடுக்கப்படுகின்றனர்.

### இலங்கை ஒரு ஜனநாயக நாடா?

இந்த நாட்டில் நடப்பது ஜனநாயக ஆட்சியா? அல்லது காவியுடைதாரிகளின் ஆட்சியா? என்பது புரியவில்லை. ஆட்சியாளர்கள் வழி தவறிச் செல்லும்போது அவர்களுக்கு நல்வழி காட்டி நீதியான ஆட்சியை நிலைபெறச் செய்வதே புத்தபிரானின் வழியில் செல்வதாகக் கூறுபவர்களின் பணியாக இருத்தல் வேண்டும். அன்பும், அகிம்சையும், பண்பும் அவர்களிடம் குடிகொண்டிருக்க வேண்டும். ஆனால் இவற்றில் ஒன்றையாவது எம்மால் காண முடியவில்லை. ஆட்சியாளர்களைத் தவறான வழிகளில் இட்டுச் செல்வதையும் கோபத்தையும் குரோதத்தையும் வெளிப்படுத்துவதையுமே அவர்களிடம் நாம் காண்கின்றோம். இவர்கள் சிறுபான்மையினருக்கு எதிரான கொள்கைகளையும் கொண்டிருப்பதுதான் பிரச்சினை களை ஏற்படுத்துகின்றது.

இவற்றையெல்லாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டுமென்றால் அவர்கள் நாடு முழுவதிலும் ஒரே அணியாகத் திரண்டு தமக்கு எதிரான அநியாயங்களுக்கு எதிராகப் போராட வேண்டும். இதில் அரசியல் பேதங்கள் இருக்கக் கூடாது. அவரவர் தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். ஆனால் பிரச்சினை ஏற்படும் போது கட்சிபேதமின்றி அனைத்துத் தமிழர்களும் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுதல் வேண்டும். எவர் ஆட்சியில் இருந்தாலும் தவறு நிகழ்ந்தால் அவர்களுக்கு எதிராகப் போராடவும் தாமதிக்கக் கூடாது. ஆனால் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் இது சாத்தியமா? என்பதுதான் இன்றுள்ள கேள்வியாகும். வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது அங்கு வாழ்கின்ற தமிழர்களின் ஏகபிரதிநிதியாகச் செயற்பட்டு வருகின்றது. தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி குரல் கொடுத்து வருகின்றார்.



### கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு காப்பாற்றுமா?

கூட்டமைப்பின் ஆதரவுடனேயே தற்போதைய அரசு தப்பிப் பிழைத்த நிலையில் காணப்படுகின்றது. ஆனாலும் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசு தாமதம் காட்டி வருவதையே அவதானிக்க முடிகின்றது. கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகா ரத்தை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ள முடியும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் சம்பந்தனுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றி வைக்கப்படவில்லை. இதனால் தலைமை அமைச்சருடனான சந்திப்பைப் புறக்கணிக்க வேண்டியதொரு நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டது.

அரசியல் கத்துக்குட்டியான சி.வி.விக்னேஸ்வ ரன் பதவிமோகத்தால் கூட்டமைப்பை வாயில் வந்தபடியெல்லாம் ஏசிக் கொண்டிருக்கிறார். இவர் கூவி அழைத்தும் இவருடன் கூட்டணி அமைப்பதற்கு மக்களால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டவர்கள் தவிர்ந்த வேறு எவருமே முன்வரவில்லை. இந்த நிலையில் வடக்கைப் பொறுத்தவரையில் தமிழர்கள் ஒன்றுபடுவதென்பது சாத்தியமாகுமென எதிர்பார்க்க முடிய வில்லை. கிழக்கிலும் இதேநிலை தான் நிலவு கின்றது. மலையகத்தைப் பொறுத்தவரையில் தமிழர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

அமைச்சர் மனோகணேசன் தமிழர்கள் ஒன்றுபடுவதன் அவசியம் தொடர்பாக ஒருமுறை கூறியமை நினைவுக்கு வருகின்றது. ஆனால் அவரது பிரதிநிதியொருவர் வடபகுதியில் வைத்து கூட்டமைப்பை விமர்சித்துப் பேசியுள்ளார்.

இந்த நிலையில் தமிழர்கள் ஒன்றாக இணைவது எவ்வாறு சாத்தியமாகும்- ஆனால் சாத்தியமாக வேண்டும். தமிழர்களுக்கு எதிராக மோசமான சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் தமிழர்கள் பிளவுபட்டி ருக்கின்றமை அவர்களது அழிவுக்கே வழிவகுக்கும். இதை உரியவர்கள் புரிந்து கொண்டால் அதுவே போதுமானது.

# முல்லைத்தீவு தண்ணீரூற்றிலும் விகாரை அமைக்க முயற்சியா?

## மக்கள் சந்தேகம்

முல்லைத்தீவு, ஜூலை 22

முல்லைத்தீவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியான, தண்ணீரூற்றுப் பகுதியிலும் பௌத்த மயமாக்கல் முளைவிடும் அபாயம் தோன்றியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.



சில ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளியவளை பொலிஸ் நிலையம் தண்ணீரூற்றில் இயங்கிய காணியில் பொலிஸார் புத்தர் சிலை வைத்திருந்தனர். பொலிஸ் நிலையம், முள்ளியவளைப் பகுதிக்குச் சில வருடங்களுக்கு முன்னர் இடம் மாற்றப்பட்டபோதிலும், அங்கு பொலிஸார் நிறுவிய புத்தர் சிலை அகற்றப்படாமலேயே காணப்பட்டுவந்தது.

அதேவேளை பொலிஸார் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து அங்கு வெசாக் வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர். தற்போது புத்தர் சிலைக்கு அருகில் பௌத்தக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. இது பௌத்த மயமாக்கல் முளைவிடும் அபாய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

முல்லைத்தீவு செம்மலை கிழக்கு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இராணுவத்தினரால் ஆரம்பத்தில் சிறிய அளவில் புத்த வழிபாடு இடம்பெற்றபோதும், தற்போது பெரிய அளவில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதுடன் பௌத்த துறவிகளும், சிங்கள மக்களும் அந்தப் பகுதியைத் தற்போது தமது இடம் என்று உரிமைகோருகின்றனர்.

முல்லைத்தீவு கற்சிலை மடுப்பகுதியில், இராணுவ முகாம் இருந்த காணியில் இராணுவத்தினரால் சிறிய அளவில் புத்த வழிபாடு செய்யப்பட்டுவந்த நிலையில், இராணுவம் வெளியேறியதையடுத்து, அக் காணியை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்திருக்கின்றது.

கொக்குத் தொடுவாய் கோட்டைக்கேணிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில், மக்கள் மீள் குடியமர்த்தப்பட்ட காலத்தில் இராணுவ காவலரண் காணப்பட்டது. அந்தக் காவலரணை அண்மித்து புத்தர் சிலை அமைக்கப்பட்டிருந்ததாகவும், இராணுவத்தினர் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறியபோதிலும் புத்தர் சிலை இன்றுவரை அந்த இடத்திலிருந்து அகற்றப்படவில்லையென்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். இது பௌத்தமயமாக்கலுக்கான திட்டமாக இருக்கலாமென்று மக்கள் அச்சம் வெளியிட்டிருந்தனர்.

இதைவிட பௌத்தர்களே இல்லாத பகுதியான வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினர் பெரிய அளவிலான விகாரை அமைத்து வழிபாடுகள் நடத்துகின்றனர். இதற்கு அண்மையில் அந்தப் பகுதியில் தமிழ் மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறிருக்கையில், தண்ணீரூற்றுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை வளாகமும், பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்படுவது பௌத்த மயமாக்கலின் அபாயத்தை உணர்த்துவதாகவுள்ளது என்று அங்குள்ளவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-246)

# முகநூலில் நிதி மோசடி இலங்கையர்களே இலக்கு

## கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

முகநூலில் இலங்கையர்களை இலக்கு வைத்து, நிதி மோசடி இடம்பெறுவதாக கணினி அவசர நடவடிக்கைப் பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக, தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரவிந்து மீகஸ்முல்ல தெரிவித்துள்ளார்.

முகநூலில் இருக்கும் குறித்த பக்கத்தைலைக் செய்தவுடன் ஒரு இலட்சம் ரூபாய் கடன் கிடைக்கவுள்ளதுடன், 25 ஆயிரம் ரூபா வைப்பிலிட வேண்டும் என்றும் தகவல்கள் வருவதாகவும் இதன் மூலமே மோசடி இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிளாஸ் காஸ் லோன் என்ற பெயரிலுள்ள முகநூல் கணக்கிலேயே இவ்வாறான நிதி மோசடி இடம்பெறுவதாகவும், இந்த மோசடி தொடர்பில், கணினி அவசர நடவடிக்கைப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மருத்துவர் ஷாபி விவகாரத்தில்

# குருநாகல் நீதிவானுக்கு எதிராக குற்றப் புலனாய்வுப் பிரிவு முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 22

குருநாகல் போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் தொடர்பான மருத்துவர் சேகு சியாப்தீன் மொஹமட் ஷாபி தொடர்பிலான விவகாரத்தில் குருநாகல் நீதிவானின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணையை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிச் சேவை ஆணைக் குழுவிடம் முறைப்பாடளித்துள்ளது.

வழக்குடன் தொடர்பில்லாத குருநாகல் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், பல் மருத்துவர் சரத் வீர பண்டாரவுக்கு பிரசவ மற்றும் பெண்ணியல் நோய் தொடர்பில் மன்றில் கருத்துக்கூற இடமளித்தமை, அவ்வாறு அவர் கூறிய கருத்துக்களை வழக்குப் பதிவுகளில் இருந்து நீக்க உத்தரவிட்டமை ஆகியவற்றை மையப்படுத்தி குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது.

இந்த விவகாரத்தில் மேலதிக விசாரணைகளுக்கு தேவையான மிக அவசியமான சில உத்தரவுகளை வழங்காது குருநாகல் நீதிவான் பக்கச் சார்பாக நடந்துகொள்வதாக தோன்றுவதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரை தூற்றும் வகையில் நீதிவனின் முகப்புத்தகத்தில் பதிவொன்று இடப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பிலும் ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிச் சேவை ஆணைக் குழுவிடம் முன்வைத்துள்ள முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ.5)

# தமிழர்களின் பிரச்சினைகள் ஒரு மாதத்தில் தீர்க்கப்படாவிடின் ஆதரவை மீளப்பெறுவோம்

## அரசைக் காப்பாற்றும் பன்னாட்டுச் சமூகத்தை கூட்டமைப்பு எச்சரிக்கவேண்டும் என்கிறார் ஆனந்தன் எம்.பி.

வவுனியா, ஜூலை 22

இன்னும் 3 மாதங்களில் அரச தலைவர் தேர்தல் வரஇருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், நாங்கள் தொடர்ந்தும் இந்த அரசுக்கு ஆதரவு வழங்க முடியாது இருக்கிறது. எனவே ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்காது விட்டால் நாம் எமது ஆதரவை நீக்கிக் கொள்ளவுள்ளோம் என்கின்ற செய்தியை கூட்டமைப்புச் சொல்ல வேண்டும். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

'நலிவுற்றுப்போன நல்லாட்சியும் தமிழ் மக்களின் எதிர்காலமும்' என்னும் கருத்தாய்வு நிகழ்வு, மன்னார் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியில் இருக்கக் கூடிய இந்த அரசு தமிழ் மக்களின் பிரதிநிதிகளான 14 பேருடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த நாட்டில் அரசியல் குழப்பம் வரும்போது எமது அரசியல் தலைவர்களும் சட்டத்தரணிகளும் இரவு பகலாக நீதிமன்றத்திலே போராடி தற்போதுள்ள தலைமை அமைச்சர் ரணிலின் பதவியைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது கொழும்பில் உள்ள அத்தனை இராஜதந்திரிகளையும் அழைத்து நான்கரை வருடங்களாக நாம் அரசுக்கு ஆதரவு வழங்கிய போதிலும் இந்த அரசு அரசியல் தீர்வில் இருந்து அத்தனை விடயங்களிலும் எம்மை ஏமாற்றியிருக்கின்றது. இன்னும் மூன்று மாதங்களில் அரச தலைவர் தேர்தலுக்குச் செல்ல இருக்கின்றார்கள். இந் நிலையில் நாங்கள் தொடர்ந்தும் இந்த அரசுக்கு ஆதரவு வழங்க முடியாது இருக்கிறது. எனவே ஒரு வாரத்தில் அல்லது ஒரு மாதத்தில் எமது மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்காது விட்டால் நாம் எமது ஆதரவை நீக்கிக்கொள்ளவுள்ளோம் என்கின்ற செய்தியை சொல்ல வேண்டும்.

இந் நிலையில் அவர்களுக்கும் (இராஜதந்திரிகள்) அடுத்த அரச தலைவராக யாரைக்கொண்டு வருவது என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது. அது தற்போதைய ரணிலா அல்லது மகிந்த தரப்பில் உள்ள ஒருவரை கொண்டு வருவதா என்ற நிலை அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கு உள்ளது.

அரச தலைவர் தேர்தலை பொறுத்தவரையில் வடக்கு - கிழக்கில் உள்ள சிறுபான்மை யினரின் வாக்குகளே தீர்மானிக்கும் சக்தி என்பதால் பன்னாட்டுச் சமூகமும் தமக்கு தேவையாக உள்ள தற்போதைய அரசை தக்க வைக்க வேண்டும் என்பதால் இந்த அரசை வைத்து தீர்க்க கூடிய பிரச்சினைக ளைத் தீர்க்கும்.

இராஜதந்திரிகளை அழைத்து அரசுக்கு கால அவகாசத்தை வழங்கி செய்ய வைக்கக் கூடிய விடயங்களை செயற்படுத்த வேண்டும். இல்லையேல் அரச தலைவர் தேர்தலில் அமெரிக்காவும், சீனாவும், இந்தியாவும் யார் வர வேண்டும் என்று நினைக்கின்றனரோ நாமும் அவர்களை வர வைப்போம் என்பதை நினைவுபடுத்த வேண்டும் - என்றார். (ஒ.5)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாணம் வண்ணை சிறிமத் வாலாம்பிகா சமேத சிறி வைத்தீஸ்வரசுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும்.
எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரம்பரை தர்மகர்த்தா க.வைத்திலிங்கச் செட்டியார் அறிவித்துள்ளார். (ஐ)

# தாக்குதல்களில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 22
நுணாவில் மேற்கு மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.
மற்றொருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.
நுனாவில் மேற்கில் நேற்று முன்தினம் இரு பகுதியினரிடையே ஏற்பட்ட மோதலில் இதே இடத்தைச் சேர்ந்த கதிர்காமு குமாரசாமி (வயது -78) சிங்காரவேலு வடிவேலு (வயது -46) ஆகியோர் காயமடைந்து யாழ்ப்பாண போதனாவுக்கு மாற்றப்பட்டனர். மீசாலை வடக்கில் நடந்த சம்பவத்தில் 71 வயதுடையவர் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (கு-9)

# ஏமாற்ற நினைத்தால் தோல்வியடைவீர்கள்!

## அடுத்த கட்டத்துக்குத் தள்ளப்படுகிறோம் என்றும் சரவணபவன் எம்.பி. ரணிலுக்கு இடித்துரைப்பு

கொடிகாமம் ஜூலை 22
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த அரசுக்கு ஒருபோதுமே ஆதரவளிக்காது என்றோ அதனால் உங்களுக்குத்தான்( ரணில் அரசுக்கு) ஆதரவளிக்க வேண்டும் என்றோ தப்புக் கணக்குப் போடாதீர்கள். உங்களால் முடியாவிட்டால் நேர்மையாகக் கூறிவிடுங்கள். ஏமாற்ற நினைத்தால் நீங்கள் நிச்சயம் தோல்வி அடைவீர்கள். நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.



இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
தென்மராட்சி கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியின் விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**எப்பவும் உங்களுடன் என்று தப்புக் கணக்கு வேண்டாம்!**

அது மாத்திரமல்ல உங்களுடைய எண்ணத்தில் ஒன்று இருக்கின்றது என்று எனக்குப்படுகிறது. இவர்கள் எந்தக் காலத்திலும் ராஜபக்ச அரசுக்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். ஏனெனில் 2009 இல் நடந்த போர்க் கொடுமைக்காக இவர்கள் என்றுமே எதிர்த்துக் கொண்டு இருப்பார்கள். எனவே இவர்களுக்கு வேறு வழியில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் தானே இருக்க வேண்டும் என்றொரு எண்ணம் உங்களுக்கு இருப்பது போல எனக்கும் படுகிறது. அப்படி நீங்கள் நினைப்பீர்களாக இருந்தால் அதுவே உங்களுக்கு கொண்டு வரப் போகின்ற முதலாவது தமிழர்களுடைய தேர்தல் கால அடியாக இருக்கும்.

**தமிழர்களிடம் தோல்வியடைவீர்**

உங்களால் சரியானதைச் செய்ய முடியாவிட்டால் அதை நேர்மையாகச் சொல்லுங்கள். அதை விட்டு ஏமாற்றிக் கொண்டே போகலாம் என்றால் நீங்கள் தமிழர்களிடம் எந்தவிதமானவற்றையும் பெறமாட்டீர்கள். நீங்கள் நிச்சயம் தோல்வி அடைவீர்கள் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன் என்பதை ஆணித்தரமாகச் சொல்லி வைக்க விரும்புகிறேன். நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

**நேர்மையாக உங்களால் அரசியல் செய்ய முடியாதா?**

சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ தற்போதைய அரசிலுள்ள ஐக்கிய தேசியக்கட்சியோ எங்களுக்குச் சொல்கின்றார்கள், "உங்களுடைய ராஜதந்திர மார்க்கம் உங்களுக்கு வெற்றியளிக்காது" என்று. நாங்கள் தான் ராஜதந்திரத்தைத் தேடினோம். ரணில் விக்கிரமசிங்க தலைகீழாக மாறி நிற்கின்றார். அவரிடம் தமிழ் மக்கள் கேட்க விரும்புவது உங்களால் நேர்மையான முறையில் அரசியல் செய்ய முடியாதா? தமிழ் மக்களையும் இந்த நாட்டிலே எல்லா விதமான உரிமைகளும் உடையவர்களாக உங்களால் வைத்திருக்க முடியாதா?

**என்னதான் செய்யப்போகிறீர்கள்?**

எங்களுக்குரிய உரிமைகளைத் தந்து சமத்துவமாக வைத்திருக்க விரும்பவில்லை. என்னதான் உங்கள் மனதில் யோசித்திருக்கிறீர்கள்? என்னதான் செய்யப் போகிறீர்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். நான் கேட்கும் கேள்வி பிழை என்றால் நீங்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். இதை விடுத்து காலையில் ஒன்று மாலையில் ஒன்று பேசுவதை நிறுத்த வேண்டும். 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதோ எல்லாவற்றையும் நாங்கள் அள்ளிக் கொடுக்கின்றோம். ஈழத்தை தவிர வேறு என்ன தேவையோ அவற்றைக் கொடுக்கின்றோம் என்று சொன்னார்கள். பின்னர் அது படிப்படியாகக் குறைக்கப்பட்டது.

**உங்களால் முடியாததை எப்படிச் செய்வீர்கள்?**

ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரப் பரவலாக்கலுக்கு விரும்புகின்றது என்று ரணில் அன்று மேடையில் சொன்னார். எதை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் இதைக் கொண்டு வந்து மூன்று வருடங்களுக்குள் தான் செய்கிறேன் என்று சொல்கிறாரோ தெரியவில்லை. தற்போது முடியாததை எப்படிச் செய்வார்?

**ரணில் தலைவராக இருக்க முடியுமா?**

எங்களுடைய நிலயை, தன்னுடைய கட்சியின் நிலயை உணராத ஒருவர் ஒரு தலைவராக எப்படி இருக்க முடியும்?. அவர் நிதானமாகச் செயற்பட வேண்டும், சொல்ல வேண்டும். தமிழ் மக்களை அவர் மீண்டும் ஏதோ ஒரு பாதையில் நின்று திசை திருப்புகின்றார். முன்னரும் பெரும்பான்மை இனம் தான் திசை திருப்பியது.
இந்தத் தருணத்தில் தலைமை அமைச்சரே என்ன செய்ய போகின்றீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.
அதை விடுத்து எங்களுடைய ஆதரவைத் தேடுவதற்காக ஆவணி மாதம் 2020 ஆம் ஆண்டு மட்டும் ஏதோ ஒரு கதையைச் சொல்லி எங்களைச் சமாளிக்கலாம் என்று யோசிக்கின்றீர்கள். அது நடக்காது! என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேலும் தெரிவித்தார். (த-159)



# சுகாதார மருத்துவ நிலையம் எழுதுமட்டுவாழில் திறப்பு

சாவகச்சேரி, ஜூலை 22
எழுதுமட்டுவாழ் தெற்கில் 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் ஒருங்கிணைப்பு நல்லிணக்க நிதியிலிருந்து அதற்கு நிதி விடுவித்திருந்தார்.
அங்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி க.தயாளன் கர்ப்பிணிகளைப் பரிசோதித்தார்.
சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், ஓய்வுபெற்ற அதிபர் இ.கயிலைநாதன், யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியக முன்னாள் திட்டமிடல் மருத்துவ அதிகாரி எஸ். நித்தியானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.
கிராமிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க காணி வழங்கிய திருமதி சிவபாக்கியம் இராசரத்தினம் நிகழ்வில் சுகாதார திணைக்களத்தினரால் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார். நிலைய வளாகத்தில் இரண்டு மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. (த-9,159)

# நவாலியில் சிறப்புற இடம்பெற்ற சோமசுந்தரப்புலவர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுத்த நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் ஆடிப்பிறப்பு விழாவும் அண்மையில் நவாலி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.
தமிழ்ச்சங்க உறுப்பினர் ஜீ.சஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை பேராசிரியர் அ.சண்முகதாசும் ஆடிப்பிறப்புக் குறித்த சிறப்புரையை செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும், தங்கத் தாத்தா சோமசுந்தரப்புலவர் நினைவுப் பேருரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும் ஆற்றினர்.
நிகழ்வில் அருணா கேதீசின் இசையில் யாழ். முன்னணிக் கலைஞர்கள் வழங்கிய சோமசுந்தரப் புலவரின் பாடல்களால் ஆன இசை நிகழ்வும் இடம்பெற்றது. (ம)



# போக்கட்டி அ.த.க மாதிரிச் சந்தை

கொடிகாமம், ஜூலை 22
கொடிகாமம் போக்கட்டி அ.த.க. பாடசாலை மாணவர்களின் மாதிரிச் சந்தை கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது.
அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ல.லிங்கேஸ்வரன் கலந்துகொண்டார். நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (த-159)

# பயிற்சிநெறி செயலமர்வுக்கு பதிவுகளை மேற்கொள்ளவும்

பருத்தித்துறை, ஜூலை 22
சுயதொழில் முயற்சி யாளர்களை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் பயிற்சிநெறி செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.
எல்.ஈ.டி. மின்குமிழ் மற்றும் எல்.ஈ.டி.பனல் ஒருங்கிணைப்பு தொழில்நுட்பம், தானியங்கி பாதுகாப்புத் தொகுதி, மறைகாணி பொருத்துதல் (சிசிரிவி), கணினி வலையமைப்பு, கையடக்க அலைபேசி திருத்துதல், பால் சார்ந்த உற்பத்திகள் (யோக்கட், பன்னீர்), பனை சார்ந்த உற்பத்திகள் போன்ற பயிற்சி நெறிகளுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது.
குறித்த செயலமர்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாகக் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (ஐ)

# உடனடியாகத் தீர்வு கிடைக்காவிட்டாலும் தீர்வுக்காக உறுதுணையாக இருப்போம்!

## கேப்பாப்பிலவு மக்களிடம் ஐ.நா. குழுவினர் நேரில் உறுதி

முல்லைத்தீவு, ஜுலை 22

உங்கள் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு சொல்ல முடியாவிட்டாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், அமைப்புகளுடனும் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.



இவ்வாறு, காணி விடுவிப்பைக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கேப்பாப்பிலவு மக்களைச் சந்தித்த ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைக்கான செயற்பாட்டுக்குழுவினர் கூறியுள்ளனர்.

குறித்த குழுவினர் போராட்டகாரர்களை அவர்களின் இடத்துக்கு நேற்றுசென்று சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே அந்தக் குழுவினர் மேற்கண்டவாறு கூறினர் என்று போராட்ட காரர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக நடந்த இந்தக் கலந்துரையாடலில், கேப்பாப்பிலவு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை தொடர்பில் குறித்த குழுவினர் கேட்டறிந்தனர்.

நாம் தொடர்சியாக முன்னெடுத்துச் செல்லும் போராட்டத்தின் நியாயப்பாடு, போராட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் எம்மிடம் கேட்டறிந்தனர் என்று போராட்டக் காரர்கள் மேலும் தெரிவித்தனர். (த-246)

## செஞ்சிலுவை சங்க ஆளுநர் சபைக்கு கிளிநொச்சி கிளையிலும் தெரிவு

கிளிநொச்சி, ஜுலை 22

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தேசிய இளைஞர் ஆளுநர் சபை உறுப்பினர்களில் ஒருவராக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையின் நீண்ட கால தொண்டரான மகான் வினோத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குறித்த உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் புத்தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, தேசிய இளைஞர் ஆளுநர் சபைக்கு காத்திருக்கும் உறுப்பினராக கிளிநொச்சி கிளையின் நீண்ட காலத்தொண்டராகவும் தற்போது கிளிநொச்சி கிளையின் இளைஞர் ஆளுநர் சபை தலைவர் லக்சுயனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜுலை 22

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பகுதியில் சுமார் 8 வருடங்களின் பின்னர் மாங்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கென புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் 2011ஆம் ஆண்டு மாங்குளம் வடக்குக்கான கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக தெரிவு இடம்பெற்றிருந்தது. எனினும் கடந்த 8 ஆண்டுகளாகப் புதிய நிர்வாகத் தெரிவுகள் எவையும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் இந்த விடயம் மாகாண கிராம அபிவிருத்திதிணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு தற்போது புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

தலைவராக இ.அருளானந்தம், செயலராக செ.லவக்காந், பொருளாளராக யோ.கபிலன் -ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-105)



## கன்னியாவுக்கு ரெலோ பயணம்

யாழ்ப்பாணம், ஜுலை 22

திருகோணமலை கன்னியா பிள்ளையார் ஆலயத்தை தொல்லியல் திணைக்களம் மூலம் அபகரிக்கும் நடவடிக்கையைத் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த குழுவினர் பார்வையிட்டனர்.

கடந்த திங்கட்கிழமை சென்ற அவர்கள் தென்கயிலை ஆதீன சுவாமியை அவரது ஆதீனத்திலும் சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

தொல்பொருள் திணைக்களம் எனும் போர்வையில் தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாகவும் திட்டமிட்டமுறையிலும். மேற்கொள்ளப்பட்டு வரும் ஆக்கிரமிப்புக்களின் ஒரு கட்டமாக திருகோண மலை கன்னியாவில் விநாயகர் ஆலயம் உடைக்கப்பட்டு அந்த இடத்தில் அரச அதிகாரத்தின் துணையுடன் விகாரை அமைக்கும் முயற்சியைத் தடுக்கும் வண்ணம் பிரதேச வாழ் உணர்வுமிக்க இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர். அதன் தொடர்ச்சியாக அவர்களுடன் இணைந்து செயற்படுவது குறித்த கலந்துரையாடலும் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி1)

*சிரமசக்தி செயற்றிட்டம்*

## கருகம்பனை இந்து இளைஞர் கழகத்துக்கு முதலிட விருது

யாழ்ப்பாணம், ஜுலை 22

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற 'சிரமசக்தி' செயற்றிட்டம் 2018 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கலில், கருகம்பனை இந்து இளைஞர் கழகத்துக்கு ஒரு விருது கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணம் 'கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு இளைப்பாறு மண்டபம் அமைத்தல்' என்ற செயற்றிட்டம் மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

விருது மற்றும் மதிப்பளிப்பு குருநாகலில் அண்மையில் நடைபெற்றது.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் நகுலேச்சரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கருகம்பனை இந்து இளைஞர் கழகம் இதைச் செயற்படுத்தியிருந்தது. அதற்காக இந்த விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தைச் செயற்படுத்திய இந்து இளைஞர் கழகத்தையும் இளைஞர் சேவை அலுவலரையும் சிறப்புற நெறிப்படுத்தியமைக்காக தெல்லிப்பளை பிரதேச செயலர் ச.சிவசிறி மதிப்பளிக்கப்பட்டார்.

2017ஆம் ஆண்டு இதே செயற்றிட்டத்தின் கீழ் குடிதண்ணீர் விநியோக திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டம் குறித்த கிராம மக்களுக்கு மட்டுமல்லாது அயற்கிராம மக்களும் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)







*கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பன்னிரு மாதிரி விளக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தென்மராட்சி பிரதேச கலாசார அலகின் ஆடிப்பிறப்பு நிகழ்வு நாவற்குழி கிழக்கு அறிவொளி மன்ற மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சிறார்கள், பொது மக்கள் இதில் கலந்துகொண்டனர். (த-9)*

# வடக்கிலுள்ள தமிழ்த் தலைமைகள் ஓரணியாகக் களமிறங்கவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கிளிநொச்சி உறவுகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜுலை 22

வடக்கிலுள்ள தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரே அணியாகத் தேர்தலில் களம் இறங்க வேண்டும்.

விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய வேண்டும்.

இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் கிளிநொச்சியில் போராடிவரும் உறவுகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலுள்ள அவர்களின் சங்கத்தில் நேற்று முன்தினம் நடந்த ஊடக சந்திப்பில் லீலாதேவி ஆனந்தநடராஜா மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்மை ஏமாற்றி விட்டது. அவர்கள் சுயநலமாகச் செயற்படுகின்றனர். இந்த நிலையில் எமது பிள்ளைகளின் விடிவுக்காகவும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசுவதற்கு பொது அணி தேவைப்படுகின்றது. அவ்வாறு அனைத்துத் தரப்பும் ஓரணியில் திரண்டு செயற்படுவதே பொருத்தமானது.

இன்று 879 நாளாக போராட்டம் இடம் பெற்று வருகின்றது.

இன்றுவரை தீர்வில்லை. இதுவரை 30 பேர்வரையில் தமது பிள்ளைகளை காணாதவர்களாக உயிரை மாய்த்துள்ளனர்.

அமைதி வழிப் போராட்டங்களைக் குழப்பும் வகையில் எமது கோவில்கள் ஆக்கிரமிக்கப்படுவது உள்ளிட்ட பல பிரச்சினைகள் எழுந்து வருகின்றன. இவை திட்டமிட்டு எம்மீது திணிக்கப்படுகின்றமையை உணர்கின்றோம்.

எமது அரசியல் தலைமைகள் அரசுடன் ஒத்துச் செயற்படுவதனாலேயே மனோ கணேசன் அழைத்தபோது சென்றிருக்கவில்லை என்று தெரிவித்தார். (த-35)

## குடமியன் அ.த.கவில் திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 22

தென்மராட்சி வரணி குடமியன் அ.த.க.பாடசாலையின் திறன் வகுப்பறைத் திறப்பு நிகழ்வு அண்மையில்நடைபெற்றது.

பாடசாலைஅதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் நடந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ல.லிங்கேஸ்வரன், சிறப்புவிருந்தினராக வரணி ஒன்றிய உதவிப் பொருளாளர்



ந.அமலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். முதன்மைவிருந்தினர் திறன் வகுப்பறையைத் திறந்துவைத்தார்.

ரட்ணம் பவுண்டேஷன் நிறுவிய திறன்வகுப்பறைகளில் இது 12 ஆவது பாடசாலை. நிகழ்வில் கோட்டக்கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (த)

# வீட்டுத்திட்டம் வழங்குவதில் முல்லைத்தீவில் பாரபட்சம்

## நீராவிப்பிட்டி, ஹிச்சிராபுரம் முஸ்லிம் மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை 22
முல்லைத்தீவு நீராவிப்பிட்டி, ஹிச்சிராபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்களுக்குரிய வீட்டுத்திட்டம் வழங்குவதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்றும், முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கட்சி ஆதரவாளர்களுக்கு மட்டுமே வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக கடந்த வியாழக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த சனிக்கிழமை ஹிச்சிராபுரம், நீராவிப்பிட்டி பகுதிகளில் நீண்டகாலம் இடம்பெயர்ந்து வாழுகின்ற, மக்களுக்கான வீட்டுத் திட்டம் 160 பேருக்கு வழங்கப்பட்டது. அந்த வீட்டுத் திட்டத்திலே அனைத்துத் தகுதிகளும் இருந்த 20 பயனாளிகளின் பெயர்கள், பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் வீட்டுத் திட்டங்கள் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் ஆதரவாளர்களுக்கே வழங்கப்படுகின்றது.
இந்த வீட்டுத் திட்டமானது, இந்தப் பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவர்குக்கே வழங்கப்படும் எனவும், தனிநபருக்கு வீடுவழங்கமாட்டோம் எனவும் தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்காளர் பதிவு செய்திருப்பவர்களுக்குத்தான் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டது.
அவ்வாறு தெரிவிக்கப்பட்டபோதிலும், நீராவிப்பிட்டி, ஹிச்சிராபுரம் பகுதிகளில் நிரந்தரமாக வசிக்காத, முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்காளர் பதிவு இல்லாதவர்களும் தனி நபர்களும் ஏற்கனவே வீடுகள் வழங்கப்பட்டவர்களுக்கும் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். காணி இல்லாதவர்களுக்கும் வீட்டுத்திட்டத்துக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறாக இந்த வீட்டுத்திட்ட விடயத்தில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன.
நீண்டகாலம் இடம்பெயர்ந்து பல்வேறுபட்ட இன்னல்களுடன் இருக்கும் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கின்றனர். வீட்டுத்திட்டத்தில் பெண் தலைமைத்துவக்குடும்பங்களின் பெயர்களும், மிகவும் வறுமைப்பட்டு நீண்டகாலமாக குடிசைகளில் வாழ்கின்ற மக்களின் பெயர்களும் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. அதை விட நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களுக்காக வழங்கப்படவுள்ள கொடுப்பனவுகளும் ரிசாட் பதியுதீனின் ஆதரவாளர்களுக்கு வழங்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் மாவட்டச் செயலர், பிரதேசசெயலர் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரையில் எவ்வித தீர்வுகளும் எட்டப்படவில்லை. உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான வீட்டுத்திட்டங்களும், கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும்- என்று அவர்கள் தெரிவித்தனர். (எ-246)



## மன்னார் அரபுக் கல்லூரியில் ஷரீஆ கற்கை நெறி நிறைவு

### ஒரு குழு உலமாக்களாயினர்

தலைமன்னார், ஜூலை 22
மன்னார் எருக்கலம்பிட்டி சயீரியா அரபுக்கல்லூரியிலிருந்து முதன்முதலாக எட்டு உலமாக்கள் தங்கள் ஷரீஆ கற்கை நெறியை முடித்து வெளியேறினர். இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
இந்த அரபுக்கல்லூரி மன்னார் எருக்கலம்பிட்டியில் 2011.12.11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஏழு வருடங்களாக அரபுக் கல்லூரியில் மௌலவிக்கான கற்கையை முடித்து வெளியேறும் முதல் குழு இது என்று தெரிவிக்கப்பட்டது.
அரபுக் கல்லூரியின் தலைவர் மௌலவி கே.கிதாயதுல்லா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அரபுக் கல்லூரியின் நிர்வாகிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், எருக்கலம்பிட்டி பகுதியின் முக்கியஸ்தர்கள், உலமாக்கள், பாடசாலை அதிபர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
அரபுகல்லூரியை ஏழு வருடங்களாகப் பராமரித்து நடத்திய அதன் தலைவராக திகழ்ந்த மௌலவி கே.கிதாயதுல்லா பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டார். (த-60)

## கரம்பைக் குறிச்சி அ.த.கவில் சிறப்பான கல்விக் கண்காட்சி

### இயற்கைப் பொருள்களில் உருவங்கள்

கொடிகாமம், ஜூலை 22
தென்மராட்சி கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் கல்விக் கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், மதிப்புறு விருந்தினராக கிராம அலுவலர் மோ.பிரகாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.நிஜன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அயற்பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வகுப்புக்களின் ஆக்கப் பொருள் கண்காட்சியைத் திறந்து வைக்கும் போது மாணவர்கள் இனமத ரீதியாக கலாசார உடையணிந்து தத்தமது இனத்துக்குரிய தாய் மொழியில் விருந்தினர்களை வரவேற்றனர். சமாதான நல்லிணக்கத்தை ஆரம்பப் பிரிவிலிருந்து ஆசிரியர்கள் செயற்படுத்தி வருகின்றனர்.
டெங்கு ஒழிப்புத் தொடர்பாக தரம் 3 மாணவி செல்வி சி.சிவகலை டெங்கு எவ்வாறு ஏற்படுகிறது அதிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது தொடர்பான சுலோகங்கள் சட்ட நடவடிக்கை விடயங்களைத் தெளிவுபடுத்தி டெங்கிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம் என்ற எண்ணக்கருவில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார்.
தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிலான ஆக்கப் பொருள்கள் அனைத்தும் கழிவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. அனைத்து பொருள்களும் பாடத்திட்டத்தோடு தொடர்புபடுத்தியும் அழிந்து செல்லும் பாரம்பரிய பொருள்களை ஞாபகப்படுத்தும் வகையில் ஆக்கங்களை ஆசிரியர்களின் வழிகாட்டலில் பிள்ளைகளுடன் இணைந்து பெற்றோர்கள் தயாரித்திருந்தனர். தரம் 1லிருந்து 5 வரையிலான மாணவர்கள் கழிவுப் பொருள்களைக் கொண்டு பிள்ளைகள் விரும்பி ஏற்கக் கூடிய வகையிலான ஆக்கப் பொருள்கள் அமைக்கப்பட்டன. களிமண்ணினால் செய்யப்பட்ட இறையுருவங்கள், மிருகங்கள், பனை, தென்னைப் பொருள்களால் செய்யப்பட்ட ஆக்கங்கள் ஆதிகால உபகரணங்கள் பாட அலகுடன் தொடர்புபட்ட விடயங்கள் யாவும் பதாகைகளாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (த-159)





## பேருந்து நிலையத்தில் பொதியால் பதற்றநிலை

வவுனியா, ஜூலை 22
வவுனியா, பழைய பேருந்து நிலையத்தில் நேற்றிரவு 7 மணியளவில் காணப்பட்ட பொதி ஒன்றால் பதற்ற நிலை காணப்பட்டதுடன், சிறப்பு அதிரடிப் படையினர் சோதனையில் ஈடுபட்டனர்.
வவுனியா, பழைய பேருந்து நிலையத்திலுள்ள பேரூந்து ஏறுமிடத்தில் பொலித்தீனால் முழுமையாகச் சுற்றப்பட்ட பொதி ஒன்று நீண்ட நேரமாக காணப்பட்டுள்ளது. பொதி தொடர்பில் எவரும் உரிமை கோராமையால் வவுனியாப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.
பொலிஸார் சிறப்பு அதிரடிப் படையினருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். இராணுவத்தினரும் சிறப்பு அதிரடிப்படையினரும் பொதியை மீட்டுச் சோதனையிட்டனர்.
பொதியில் ஆடைகள் காணப்பட்டன. அவை வெளிநாட்டிலிருந்து வந்தவரால் கொண்டுவந்திருந்ததற்கான ஆதாரங்கள் காணப்பட்டன. சரவணன் ஆரணி எனற பெயரில் அது காணப்பட்டுள்ளது.
உரிமையாளர் இல்லாததால் பொதி வவுனியா பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது. இதனால் வவுனியாபழைய பேருந்து நிலையத்தில் சுமார் அரை மணி நேரம் பதற்ற நிலை காணப்பட்டது.
இந்த நிலையில் பொதியைத் தவறவிட்டுச் சென்றவர் வவுனியா பொலிஸ் நிலையத்துக்குச் சென்று ஆதாரம் காட்டி அதைப் பெற்றுக்கொண்டார். (த)



நா.யோகேந்திரநாதன் எழுதிய

## ‘மரண மழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு’ என்னும் நூல் நேற்றுமுன்தினம் வெளியீடு!

கிளிநொச்சி, ஜூலை, 22
நா.யோகேந்திரநாதன் எழுதிய 'நீந்திகடந்த நெருப்பாறு நூலின் மரண மழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு' எனும் 3ஆவது பகுதி கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.
கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். நூலின் முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெளியிட்டு வைத்தார். (ம-21,6)



## பேசாலை சிவில் அமைப்புடன் பொலிஸார் கலந்துரையாடல்



மன்னார், ஜூலை 22
மன்னார், பேசாலைபொலிஸ் பிரிவிலுள்ள சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், பேசாலை பொலிஸாருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
பேசாலை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுந்தினம் மாலை இது நடைபெற்றது.
பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தமித்த சோமஜித் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பேசாலைக் கிராமத்திலுள்ள ஒவ்வெரு கிராம அலுவலர் பிரி வுக்குமான புதிய சிவில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
இதன்போது புதிய நடைமுறைகள் தொடர்பாகப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மக்களுக்குத் தெளிவூட்டல்களை வழங்கினர். தொடர்ந்து சிவில் அமைப்புக்களின் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது. (த-56)



## ஆய்வு கூடத்துக்கு புரஜெக்டர் அன்பளிப்பு

வவுனியா,ஜூலை.22
வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கு பல்லூடக எறியி (புரஜெக்டர்) ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலரும், வவுனியா நகர சபை உறுப்பினருமான சுந்தர லிங்கம் காண்டீபனால் இது அன்பளிப்புசெய்யப்பட்டது. குறித்த உபகரணம் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் காலை வழிபாட்டின்போது கல்லூரி அதிபர் பொ.சிவநாதனிடம் கையளிக்கப் பட்டது. (ஐ-110)

## விபத்தில் இளைஞர் படுகாயம்

வவுனியா, ஜூலை 22
வவுனியா காமினி பாடசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் நடந்த விபத்தில் இளைஞன் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா இளைஞர் சேவைகள் மன்றத்தின் வாகனமும் இளைஞன் பயணித்த உந்துருளியும் மோதி விபத்து இடம்பெற்றது. உந்துருளியில் பயணித்த 23 வயதுடையவரே காயமடைந்தார். வவுனியாப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த)

## அலங்கார உற்சவம்

அளவெட்டி,ஜூலை 22
யாழ்ப்பாணம் கல்வளை சண்டிலிப்பாய் ஆட்டுப்பட்டி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை விளக்கேற்றலு டன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு பொங்கலுடன் ஆரம்பமாகி மதியம் 12 மணி அளவில் பைரவர் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பூஜைகள் இடம்பெற்று பைரவ பெருமான் வீதியுலா வருதலுடன் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ -63)

# திணைக்களங்களின் பெயரால் நடைபெறும் காணி பறிப்புக்கள்


## நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

**உள்நாட்டுப் போரால் தமிழ் மக்கள் பெரும் சொத்து இழப்புக்களையும், உயிர் இழப்புக்களையும் எதிர்கொண்டிருந்த நிலையில் தற்போது அவர்களின் நிலங்கள் பல்வேறு காரணங்களைக் காட்டிப் பறிக்கப்படுவது பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.**

தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்கள் வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் என்பவற்றால் மெல்ல மெல்ல கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில் அதைத் தடுப்பதற்குக் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வடக்கின் பொதுமக்களுக்குச் சொந்தமான பல இடங்கள் இன்னமும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. அவற்றை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விடுக்கப்படும் நிலையில், இன்னமும் அவை முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இது ஒரு புறம் இருக்க தமிழ் மக்கள் காலம் காலமாகப் பயிர் செய்த நிலங்களும், குடியிருந்த நிலங்களும் வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பவற்றால் உரிமை கொண்டாடப்படுகின்றன. அவற்றில் குடியிருக்கவோ, பயிர் செய்யவோ மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.
முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் என வடக்கின் பல பிரதேசங்களில் வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், வனஜீவ்ராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பவற்றால் தமது காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் போரின் பின்னர் மீளக் குடியமரச் செல்லும்போது அல்லது பயிர் செய்யச் செல்லும் போது இந்தத் திணைக்களங்கள் தமக்கு இடையூறாக இருக்கின்றன என்று அவர்கள் விசனிக்கின்றனர்.
இந்த விடயம் பல தடவைகள் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டபோதும் இது வரை அதைத் தடுப்பதற்குக் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை. தற்போதும் தொடர்ச்சியாக இந்தச் செயற்பாடுகள் அந்தத் திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் மெல்ல மெல்லக் கையகப்படுத்தப் பட்டு வரும் நிலையில், அதைத் தடுக்காது விட்டால் எதிர்காலத்தில் இது பெரும் பிரச்சினையாக உருவெடுக்கும் என்று மக்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.
ஒரு தொகுதி மானாவாரிப் பயிர்ச் செய்கைக் காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் அபகரித்துள்ளது என்று முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களில் ஒன்றான கொக்குத்தொடுவாய் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.
1984ஆம் ஆண்டு திட்டமிட்டு சிங்கள காடையர்களால் விரட்டிய டிக்கப்பட்ட எமது கிராமம் இடம்பெயர செய்யப்பட்டது. அதன் பின்னர் வெலிஓயா என்னும் பெயரில் மகாவலி எல் வலயம் உருவாக்கப்பட்டு எங்களது ஆயிரத்து 36 ஏக்கர் குளக் காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்கியுள்ளார்கள் . இந்த குளக்காணிகளை பறித்தது மட்டு மல்லாது தற்போது நாங்கள் விவசாயம் செய்துவரும் மானாவரி நிலங்களான வெள்ளை கல்லடி ,தீமுந்தல் ,குஞ்சுக்கால்வெளி ,கோட்டைக் கேணி போன்ற வயல்நிலங்களில் எம்மை வயல் செய்யவிடாது வன ஜீவராசிகள் திணைக்களம் எல்லைகற்களை நாட்டியும் பெயர்ப் பலகைகளை நாட்டியும் பல நிபந்தனைகளை விதித்து அபகரித்துள்ளது. வனஜீவராசிகள் திணைக்களத்தின் பறவைகள் சரணாலயம் கொக்குளாய் பகுதியிலேயே இருக்கின்றது. ஆனால் கொக்குளாயிலிருந்து 10 கிலோமீற்றர் தொலைவிலிருக்கின்ற எமது வயல்நிலங்களை நோக்கி வனஜீவராசிகள் திணைக்களம் தற்போது வந்திருக்கின்றது என்று அந்த மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தால் இவ்வாறான கையகப்படுத்தல்கள் அதிகரித்துள்ளன என்றும் மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.
அதைப்போன்று கிளிநொச்சி, ஜெயபுரம் மக்களும் தாம் பாரம்பரியமாக வயல் செய்த நிலங்கள் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டன என்று குற்றஞ்சாட்டியிருந்தனர்.
போர் நிலமையால் அந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றதுடன் இந்தியாவுக்கும் இடம்பெயர்ந்து சென்றிருந்தனர். மீண்டும் 2010ஆம் ஆண்டு மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி தமது காணிகளை துப்புரவு செய்தபோது அப்பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதாக கூறிய ராணுவம் மக்களை தடுத்தது. மீண்டும் கண்ணிவெடிகள் அகற்றப் பட்டு 2017ஆம் ஆண்டு காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. சுமார் 70 ஏக்கர் நிலம் அந்த நிதியின் ஊடாக திருத்தியமைக்கப்பட்டு, மக்கள் பயிர்ச் செய்கைக்குத் தயாரான போது வனவளத் திணைக்களம் குறித்த பகுதி தமது ஆளுகைக்குட் பட்ட வனப்பகுதி என கூறியதுடன் மக்களை தமது காணிகளுக்குள் போகவிடாது தடுத்தது என்று குற்றஞ்சாட்டியிருந்தனர்.
வவுனியாவிலும் தமக்குச் சொந்தமான வயல் காணிகளை அபகரிக்க வனவளத் திணைக்களம் முயற்சிக்கின்றது என்று முஸ்லிம் விவசாயிகள் அண்மையில் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். வடக்கு மாகாண முழுவதும் இவ்வாறான் காணி அபகரிப்புக்கள் தற்போதுவரை தொடர்ந்தவண்ணமே உள்ளன.
இலங்கையில் 28 வீதமாக உள்ள வனப்பகுதியை 35 வீதமாக அதிகரிக்கத் திட்டப்பட்டுள்ளது என்று அரச தலைவர் கூறியுள்ளார். ஆனால் அது இலங்கையில் உள்ள 9 மாகாணங்களிலும் சரியாக பங்கீடு செய்யப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தை மட்டும் வனப்பகுதியாக மாற்ற இயலாது என்று சுட்டிக்காட் டப்படுகின்றது. சத்தமில்லாது நடந்து வரும் இந்தக் காணி அபகரிப்புக்களைத் தடுத்து நிறுத்த தமிழ் அரசியல் தலைவர்கள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்களால் கோரிக்கை விடுக்கப்படு கின்றது. (எ)

## தொடருந்துடன் மோதி யானை உயிரிழப்பு



வவுனியா,ஜூலை.22
தொடருந்துடன் மோதி யானை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற தபால் தொடருந்து புளியங்குளம் பகுதியில் யானை ஒன்றை மோதித்தள்ளியுள்ளது.
விப்த்தில் பலத்த காயமடைந்த யானை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது. குறித்த பகுதியில் அண்மைக் காலமாக யானைகளின் நடமாட்டம் இருந்துவருகிறது. வவுனியா, தாண்டிக்குளம் மற்றும், மூனாமடு பகுதிகளில் அண்மையில் 15 க்கு மேற்பட்ட மாடுகள் தொடருந்துடன் மோதி உயிரிழந்தன. இவ்வாறு அண்மைக்காலமாக இடம்பெறும் கால்நடைகளின் விபத்துக்களை தடுக்க உரிய அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-110)

## கொல்லவிளாங்குளத்தில் சிறப்புற நடந்த வயல் விழா

முல்லைத்தீவு,ஜூலை 22
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட கொல்லவிளாங்குளத்தில் வயல் அறுவடை விழா சிறப்புற நடைபெற்றது.
நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்டப் பிரதிவிவசாய பணிப்பாளர் உகநாதன், வவுனிக்குளம் நீர்பாசன பொறியியலாளர் கை.பிரகாஸ்,மாந்தை கிழக்கு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் நளாயினி, நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவின் துணைவர் .சிறீஸ்கந்தராசா, நெல் ஆராச்சி நிலைய உதவியாளர்கள்,கமநல அபிவிருத்தி அலு வலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.(ஐ-ரி)



## யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாதம் அரசதலைவர் வரவுள்ளார்

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில்ஒகஸ்ட் 30ஆம்திகதி இடம்பெறவுள்ள இறுதி நாள் நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பங்குபற்றுவார். வடக்கு மாகாண ஆளுனர் கலாநிதி சுரேன் ராகவன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அரசதிணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 தொடக்கம் 30 வரையான காலப் பகுதியில் நாட்டுக்காக ஒன்றிணைவோம் செயற்பணி இடம்பெறவுள்ளது. இதில் கிராம சக்தி, சிறுவர் பாதுகாப்புத் திட்டம் , உணவு உற்பத்தி,சிறுநீரக நோய், போதைப் பொருள், சுற்றாடல் பாதுகாப்பு உள்ளிட்ட 10 தலைப்புக்களில் நாட்டுக்காக ஒன்றிணைவோம் செயற்றிட்டம் இடம்பெறவுள்ளது. (த-50)

# தொண்டர் ஆசிரியரைக் கொண்டு நிரப்பப்படுகிறது கிளி. மாவட்டம்!

## மாவட்டக் கல்வியியலாளர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 22

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் காலத்துக்குக் காலம் தொண்டர் ஆசிரியர்களாலேயே நிரப்பப்பட்டு, ஆசிரியர் எண்ணிக்கை கணக்கிடப்படுகின்றது என்று மாவட்டக் கல்வியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அனைத்துத் தரத்திலும் உள்ள 3 ஆயிரத்து 812 ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். அவர்களில் 452 பேர் தொண்டராசிரியர்கள் என்ற அடிப்படையில் ஆசிரிய சேவைக்குள் உள் ஈர்க்கப்பட்டவர்கள். இதனால் மாவட்டத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை மட்டும் உச்சம் பெறுமே அன்றித் தரம் உயர்ந்தப் படமாட்டாது என ஆசிரிய சங்கங்களும் அடிக்கடி கூறி வந்தன. ஏனைய மாகாணங்கள் பட்டதாரிகள் எனவும் பயிற்றப்பட்டவர்கள் எனவும் நியமனத்தை வழங்க வடக்கும், கிழக்கும் மட்டுமே முதியவர்களுக்கும் தொண்டராசிரியர் நியமனம் வழங்குகின்றன என்றும் சுட்டிக்காட்டியிருந்தன.

கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி வடக்கு கிழக்கில் ஆயிரத்து 117 பேருக்கு தொண்டராசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. அதில் வடக்கு மாகாணத்தில் 378 பேருக்கு நியமனங்கள் கிடைத்தன. வடக்கில் நியமிக்கப்பட்ட 378 பேரில் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 140 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களிலும் தொண்டராசிரியர் ஊடாக நியமனம் பெற்றோர் 270 பேர் பணியில் இருந்தனர். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் வழங்கிய நியமனத்தில் 42 பேர் நிய மிக்கப்பட்டனர். தற்போது 140 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது 452 பேர் தொண்டராசிரியர் ஊடாக நியமனம் பெற்றுப் பணியில் உள்ளனர். தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் அதிகம் பணியாற்றும் மாவட்டமாகக் கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது.

அதேவேளை, இதுவரை காலமும் தொண்டராசிரியர் நியமனத்தில் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டன. தற்போது ஆரம்ப பிரிவுகளில் வெற்றிடம் இல்லை என்பதால் இடைநிலைப் பிரிவுக்குமான பாட ஆசிரியர்களாகவும் நியமனங்கள் வழக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நியமனம் பெறும் ஆசிரியர்களின் இடமாற்றத்திலும் நெருக்கடியே காணப்படுகின்றது. தொண்டராசிரியர்களாக இருந்து நியமனம் பெற்றவர்கள் எனில் வருடாந்த இடமாற்றத்தில் எமக்கு வேண்டாம் எனச் சில வலயங்கள் கூறுகின்றன. இது எதிர்காலத்தில் சிக்கல்களை உருவாக்கும் என்றும் மாவட்டத்தின்கல்வியியலாளர்கள்சுட்டிக்காட்டுகின்றனர். (எ-105)

## வவுனியா ஊடக அமையம் நேற்று ஆரம்பிப்பு




வவுனியா, ஜூலை 22

வவுனியா ஊடகவியலாளர்களின் நலன் காக்கும் ஊடக அமையம் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு கிளிநொச்சி ஜ.சி.சிதனியார் பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களின் நலன்கருதியும் இணைய ஊடகவியலாளர்களுடன் ஏனைய ஊடகவியலாளர்களையும் இணைத்துக் கொண்டு ஊடக அமையம்செயற்படுவதற்கென இது திறக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஊடக அமையத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் விடயங்களில் கவனம் எடுத்துச் செயற்படவும் ஏனைய வடக்கு - கிழக்கிலுள்ள ஊடக அமைப்பினருடன் இணைந்து பயிற்சி நெறிகளை மேற்கொண்டு பணியாற்றவும் ஊடகவியலாளர்கள் தமது பொறுப்புக்களைச் சரியான முறையில் மேற்கொள்ளவும் இன்றைய நிர்வாகக் கூட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த)

# மன்னாரில் மறைசாட்சிகளாக இறந்தவர்களை புனிதர்களாக்குவதற்குத் துரித நடவடிக்கைகள்

## அவர்களின் எலும்புகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார் மன்னார் ஆயர் பெர்னான்டோ ஆண்டகை

மன்னார், ஜூலை 22

மன்னார் தோட்டவெளியில் மறைசாட்சிகளாக குருதி சிந்தியவர்களை புனிதர்களாக்குவதற்குச் சான்றாக தோட்டவெளியில் அவர்களின் கல்லறையில் இருக்கும் ஓரிரு எலும்புக் கூடுகளை அமெரிக்காவுக்கு அனுப்பி பரிசோதனை மேற்கொள்ள எண்ணியிருப்பதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்தார். மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்திலுள்ள 21 கிராமங்கள் உள்ளடக்கப்பட்ட மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிறைவு விழா தோட்டவெளி வேதசாட்சிகளின் திருத்தலத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி அலெக்ஸ்சாண்டர் பெனோ சில்வா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிறைவு விழாவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டு கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் தோட்டவெளி மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழாவை மன்னார் மறைசாட்சிகளின் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் நினைவு கூர்ந்து இந்தத் திருப்பலியில் நாம் பங்கு கொண்டுள்ளோம்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு கத்தோலிக்க திருச்சபையின் இலங்கை அவை மக்கள் கிறிஸ்து உயிர்ப்பு தினத்தன்று ஆலயங்களில் இறைவனைப் புகழ்ந்து கொண்டிருந்த வேளையில் தங்கள் உயிரை இழந்தார்கள்.

இதனால் இன்று அவர்கள் மறைசாட்சிகள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர் விலாசம் மற்றும் இவர்களின் உறவினர்களின் விபரங்கள் எல்லாம் திரட்டப்பட்டு வருகின்றன. இக்காலத்தில் இவ்வாறான சம்பங்களின் போது தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட இவர்களின் விவரங்களை திரட்டக் கூடியதாக இருக்கின்றது.

இதேபோன்று 475 ஆண்டுகளுக்கு முன் 600க்கும் மேற்பட்ட கத்தோலிக்கர்கள் தோட்டவெளியாகிய இவ்விடத்தில் கொலை செய்யப்பட்டு குருதி சிந்தி மறைசாட்சியானார்கள். அந்தவேளையில் இவர்களின் படுகொலைகளைப்பற்றி மக்கள் தெரிந்து கொள்ள பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் போன்ற இவ்வாறான சமூக தொடர்பாடல்கள் இருக்கவில்லை.

இப்பொழுது எமது திருச்சபையால் மறைசாட்சிகளாக இறந்தவர்களை புனிதர்களாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். மன்னார் மற்றும் யாழ் பகுதிகளில் எனக்கு முன் இருந்த ஆயர்கள் 1500 ஆண்டு காலத்தில் இருந்த திருச்சபையானது அதாவது புனித சவேரியார் உட்பட இயேசு சபையினரும் இவர்களை புனிதர்க ளாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர். இருந்தும் இறைவனின் சித்தம் இன்னும் கைகூடாமல் இருக்கின்றது. இரண்டு தினங்களுக்கு முன் எனக்கு உரோமாபுரியிலிருந்து ஒரு கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த மறைசாட்சிகளை புனிதராக்குவதற்காக உரோமாபுரியில் செயல்படும் அமலமரி தியாகி சபையைச் சேர்ந்த அருட்தந்தை யோசவ் பொஸ்டர்காத் எனக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், தான் புனிதர்களை ஏற்றுக்கொள்ளும் பேராலயத்துக்குச் சென்றேன். இந்த மறைசாட்சிகளைப்பற்றிய சான்றுகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன என எழுதியுள்ளார். அதாவது இந்த மறைசாட்சிகள் பற்றி சரித்திரத்தில் அத்தாட்சிகள் இருக்கின்றனவா என்று கேட்டுள்ளார்.

இதைப்பற்றி எனது சிந்தனைக்கு வருவது என்னவென்றால், சில மாதங்களுக்கு முன் மன்னார் சதொசமனிதப்புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களை அமெரிக்காவுக்கு அனுப்பிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அவைகள் 16ஆம் நூற்றாண்டு காலத்து எலும்புக்கூடுகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாமும் இங்குள்ள மறைசாட்சிகளின் கல்லறையில் இருக்கும் ஓரிரு எலும்புக்கூடுகளை அமெரிக்காவுக்கு அனுப்பி கார்பன் பரிசோதனை மூலம் அவர்கள் உயிரிழந்த காலக்கட்டத்தை உறுதிப்படுத்தலாம் என்று எண்ணுகின்றேன்.

மறைசாட்சிகளின் பெயர்களோடு தொடர்புடைய ஆவணங்கள் தகவல்கள் இருக்கின்றதா என வேண்டியுள்ளார்.

நாங்கள் எமக்குக் கிடைக்கப் பெற்ற பெயர்களை ஏற்கனவே உரோமபுரிக்கு அனுப்பியுள்ளோம். இன்னும் இந்தப் பெயர்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. திட்ட வட்டமான பெயர்களா என்பதை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. ஆகவே இவர்களைப் புனிதர்களாக்குவதற்கு எமது ஒவ்வொருவரினம் பங்களிப்புக்கள் அவசியமாகின்றன.

இதற்காக மறைசாட்சிகளின் அன்னையாக இருக்கும் மரியன்னை வழியாக நாம் தினந்தோறும் செபிப்போம் - என்றார். (ம-60)



## மருத்துவ முகாம்

முல்லைத்தீவு, ஜூலை 22

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும், யாழ்ப்பாணம் சத்தியசாய்பாபா சேவா நிலையமும் இணைந்து நடத்தும் மருத்துவமுகாம் ஒட்டுசுட்டான் பழம்பாசி கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது

பழம்பாசி கிராம அலுவலர் பகிரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சத்தியசாய் சேவாநிலைய நிர்வாகிகளும், மருத்துவர்களும், பழம்பாசி கிராம அபிவிருத்தி அலுவலரும், கிராம அபிவிருத்திச் சங்க பொருளாளர் த.நிசாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பழம்பாசி பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (ம-222)

## மன்னார் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு

மன்னார், ஜூலை 22

மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பினால் மன்னார் தோட்டவெளியில் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி அலெக்ஸ்சாண்டர் பெனோ சில்வா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிறைவு விழாவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெனாண்டோ ஆண்டகை கலந்து கொண்டார். அவரின் தலைமையிலேயே கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அருட்பணியாளர்கள் இ.செபமாலை, ஜெஸ்லி, ஜெகானந்தன், பெனோ சில்வா அடிகளார்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர். (ம-60)



# முதுகெலும்பற்ற தலைவர்கள் பதவியை விட்டுச் செல்லட்டும்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 22

முடிவுகளை எடுக்க முடியாத முதுகெலும்பற்ற தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பை, செய்யக் கூடியவர்களிடம் கையளித்துவிட்டு வீடு செல்ல வேண்டும்.



இவ்வாறு கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதலில் சேதடைந்த நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டி தேவாலயம் சீரமைக்கப்பட்டு நேற்று மக்கள் வழிபாட்டுக்காக ஒப்படைக்கப்பட்டது. அங்கு திருப்பலி ஒப்புக் கொடுத்த பின்னர் உரையாற்றிய போதே மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முஸ்லிம் மக்கள் பொறுப்புக் கூறத் தேவையில்லை. அது அரசின் பொறுப்பற்ற தன்மையால் நடந்தது. உலக நாடுகளின் இருப்புக்காக அவர்களின் சதிகளில் எமது நாடு சிக்கிக் கொண்டது.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆதாரங்கள் இருந்தும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்ய முடியாமற் போனது. முதுகெலும்பில்லாத தலைவர்கள் இருப்பதே இதற்கு காரணம். வழிதவறிய இளைஞர்களை பிடித்துக் கொண்டு பன்னாடுகள் சில தமது நோக்கை அடையச் செய்த சதியின் விளைவே இந்த தீவிரவாத தாக்குதல். வெளிநாட்டு சக்திகள் இங்கு தலைதூக்க இடமளிக்க முடியாது. நாட்டின் புலனாய்வுத்துறையை அந்த சக்திகளின் சொல் கேட்டே அரசு முடக்கியுள்ளது. - என்றார். (எ)

# ஐ.தே.க. கூட்டணி ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்து

## அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22



ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி உடன்படிக்கை எதிர்வரும் மாதம் கைச்சாத்திடப்படவுள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குருநாகல் - குளியாப்பிட்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் மாதம் 5ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் இந்த நிகழ்வு இடம்பெறும். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி உள்ளிட்ட கூட்டணிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்தக் கூட்டணியில், எதிர்காலத்தில் பல கட்சிகளும் இணையவுள்ளன என்பதுடன், முக்கிய அரசியல்வாதிகளும் இணையவுள்ளனர். - என்றார். (எ)

# மாலைதீவு, இந்தியாவில் இலங்கையின் 20 படகுகள்

கொழும்பு, ஜூலை 22

இலங்கையைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் மாலைதீவு மற்றும் இந்தியத் தீவுப் பகுதிகளில் நங்கூரமிட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலுக்காக பயணித்த இந்தப் படகுகள், சீரற்ற கால நிலை காரணமாகவே குறித்த கடற்பகுதிகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அவற்றை அங்கிருந்து மீட்பதற்கான பணிப்புரைகள் இன்னமும் விடுக்கப்படவில்லை எனக் கடற்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இழுவைப் படகுகளில் உள்ளவர்களுடன் தினமும் தொடர்பை ஏற்படுத்தி உரையாடி வருகின்றோம் என்று கடற்தொழில் திணைக்கள இயக்குனர் ஜெனரல் கினிகே குமார தெரிவித்துள்ளார்.

இலங்கையை சூழவுள்ள கடல் பிராந்தியங்களில் கால நிலை தொடர்ந்தும் அசாதாரண நிலையில் உள்ளதால், மாலைதீவு மற்றும் இந்திய கடற்பரப்புக்களில் தரித்து நிற்குமாறு அந்தப் படகுகளை சார்ந்தவர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# தமிழ் மக்களுக்கு ஐ.தே.க. துரோகம் இழைக்கின்றது

## மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22



தமிழ் மக்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி பெயரளவில் வாக்குறுதிகள் மாத்திரமே வழங்கிப் பெரும் துரோகமிழைத்துள்ளது. தமிழ் மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியிலே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு , மலையக மக்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டே ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது.

வடக்கு மக்களின் அடிப்படை தேவைகள் இதுவரையில் நிறைவு செய்யப்படவில்லை. அபிவிருத்தி தொடர்பில் அழுத்தம் கொடுத்தால் அரசியல் தீர்வின் மீதான கவனம் மறைக்கப்படும் என்று கூட்டமைப்பினர் குறிப்பிடுகின்றார் கள். இவர்களின் செயற்பாடுகளால் வடக்கு தமிழ் மக்களுக்கே அரசாங்கத்தினால் எதுவும் கிடையாது போகும். அரசியல் தீர்வு ஒருபோதும் வழங்கப்பட மாட்டாது.

இனியாவது தமிழ் மக்கள் தொடர்ந்து அரசுக்கு மாத்திரம் ஆதரவாக செயற்படும் தமது பிரதிநிதிகளின் பக்கம் செல்லாமல் அரசியல் ரீதியில் சுயாதீனமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். - என்றார். (எ)

# தனிநபர் தாக்குதல்கள் இலங்கையில் தொடரும்

## இராஜாங்க அமைச்சர் விஜேவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22



ஸஹ்ரான் குழு முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தாலும் ஐரோப்பிய நாடுகளைப் போன்று தனிநபர் தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸஹ்ரானின் குழு முழுமையாக தோற்கடிக்கப்பீட்டுள்ளது. அக்குழுவில் எஞ்சியுள்ள உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் குழுவாக இருந்து எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது. இருப்பினும், அவர்கள் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் போன்றவர்கள் அல்லர். சமயத்தை முன்னிறுத்திச் செயற்படுபவர்கள். இதனால், தனிநபர்களாக இருந்து தாக்குதல்களை நடாத்த முடியும். நாம் ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான தாக்குதல்களைக் காண்கின்றோம். இதனால், ஆபத்து நிலமை இன்னும் உள்ளது. இந்த நிலமைகள் தவிர்க்கப்பட்டுள்ளதாக எமக்குக் கூற முடியாதுள்ளது. நாம் பாதுகாப்பை உறுதிப்படுத்தியே உள்ளோம் - என்றார்.

இலங்கையில் தனிநபர் தாக்குதல்கள் தொடரும் என்பது போன்ற கருத்துக்கள் பலராலும் இதற்கு முன்னரும் வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசதலைவர் வேட்பாளர் குறித்து

# சஜித் -ரவி இடையே பனிப்போர் உச்சம்

கொழும்பு, ஜூலை 22

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்வதில் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் உப தலைவர் ரவி கருணாநாயக்கவுக்கும் இடையில் பனிப்போர் உச்சக்கட்டமாக இடம்பெற்று வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



ஐக்கிய தேசியக் கட்சியில் அரச தலைவர் வேட்பாளராக களமிறக்கக் கூடிய வேட்பாளர்கள் பட்டியலை பொதுக் கூட்டங்களில் அறிவிக்கும் போது சஜித் பிரேமதாசவின் பெயரை விட்டுவிட்டே ரவி கருணாநாயக்க கூறிவருகின்றார்.

தந்தையின் செல்வாக்கை வைத்து அரச தலைவராக வருவதற்கு சிலர் முயற்சிக்கின்றார்கள் என மறைமுகத் தாக்குதல்களையும் மேடைப் பேச்சுக்களில் தெரிவித்து வருகின்றார். தொகுதியில் கட்சியை வெற்றிபெறச் செய்ய முடியாத மக்கள் ஆதரவு இல்லாத ஒருவர் எனவும் சாடி வருகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

சஜித் பிரேமதாசவின் மனைவி ஜலனி பிரேமதாசவும் அண்மையில் தன்னை எதிர்கால அரச தலைவரின் மனைவி எனக் கூறியதனால், ஊடகங்களும் பௌத்த அடிப்படைவாத குழுக்களும் பெரும் எதிர்ப்பையும் விசனத்தையும் தெரிவித்தன.

எது எவ்வாறு இருப்பினும், ஐக்கிய தேசிய்க் கட்சிக்குள் பிரதித் தலைவர் சஜித் சார்பான ஒரு குழுவும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க சார்பான ஒரு குழுவும் திரைமறைவில் செயற்படுகின்றது என்பது அரசியல் விமர்சகர்களின் வெளிப்படையான கருத்தாகவுள்ளது. (ம)

# அரச நிறுவனச் செலவுகளை குறைக்குமாறு சுற்றறிக்கை!

கொழும்பு, ஜூலை 22

அரச நிறுவனங்களின் செலவீனங்களை குறைக்க வேண்டும் என்று நிதி அமைச்சு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நிதி அமைச்சின் செயலரின் கையொப்பத்துடன் நேற்று இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை அனைத்து அமைச்சுக்களின் செயலர்களுக்கும் மாகாண சபைகளின் பிரதான செயலர்கள், திணைக்களப் பிரதானிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அரசின் வருமானத்துக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து கவனம் செலுத்தி, அரச நிறுவனங்களின் வீண் விரயங்களை தவிர்க்கும் நோக்கில் நிதிகளை செலவிட வேண்டும் எனக் குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பான மின்சார வழங்கல், தொலைபேசி சேவை, எரிபொருள் கொள்வனவு உள்ளிட்ட ஏனைய சில சேவைகள் தொடர்பாக முறையான நிர்வாக நடவடிக்கைகளை கையாளுமாறும் அந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# தபால் தொழில் சங்கத்தினர் மீளவும் பணிப்புறக்கணிப்பு

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 24 மணித்தியாலங்களுக்கு சுகயீன விடுமுறைத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கம் அறிவித்துள்ளது. நியமனங்கள் குறித்து எழுந்த பிரச்சினைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்வுகள் இதுவரை நடைமுறைப்படுத்தாமை உள்ளிட்ட சில விடயங்களை முன்வைத்தே இந்தத் தொழிற்சங்க் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளது.

கடந்த வுருடம் 16 நாள்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதற்கு இணங்க, தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன், அதை அமைச்சரவையின் அனுமதியுடன் ஜூலை மாதம் முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அமைச்சின் செயலருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது என்று தபால் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், இதுவரை தமது பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவில்லை எனச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருடனும் அமைச்சின் செயலருடனும் பல தடவைகள் கலந்துரையாடியதாக சங்கத்தின் பிரதம செயலர் எஸ்.கே. காரியவசம் தெரிவித்துள்ளார். அதனால் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் சுகயீன விடுமுறைத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை, இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் மீண்டும் ஒருதடவை சிந்திக்குமாறு தபால்சேவை அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் கேட்டுக் கொண்டுள்ளார். ஊழியர்களின் கோரிக்கை தொடர்பில் அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ)

# நவீன நகரமயமாக்கல்களை திட்டமிட்டுச் செய்கிறது அரசு

## தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 22



அரசால் திட்டமிட்ட வகையில் நகர நவீன மயமாக்கல் பணிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன என்று தலைமை அமைச்சர் ரணில் விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஹெட்டிபொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் வாராந்த சந்தைக் கட்டடத் தொகுதித் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு நகரத்தில் துரித அபிவிருத் திகளை விரைவில் காணமுடியும். இந்து சமுத்திரத்தில் கொழும்பை ஒரு முக்கிய நகரமாக மாற்றுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

கொழும்பு, கண்டி போன்ற பிரதான நகரங்கள் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய அனைத்து நகரங்களிலும் பெரும் அபிவி ருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை அபிவிருத்தி நோக்கில் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்வரும் 5 முதல் 10 வருடங்களுக்கு இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

மேல் மாகாணத்தில் கொழும்பை அண்டிய பிரதேசங்களில் மாநகரங்களை உருவாக்கும் நோக்கிலான வேலைத் திட் டங்களும், இலகு ரயில் சேவைகளுக்கான திட்டங்களும், புதிய வீடமைப்புத் திட்டங்களும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர் நாட்டைக் கட் டியெழுப்புவது கடினம் என்று பலர் கருதினார்கள். எனினும் அந்தச் சவால்களுக்கு மிகவும் வலுவுடன் முகங்கொடுத்ததன் காரணமாக நாடு தளராமல் திடமாக இருந்தது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக நாட்டு மக்களிடையே பெரும் அச்சம் ஏற்பட்டது. அந்த அச்சம் நாடு முழுவதும் துரி தமாகப் பரவியது. தொடர்ச்சியாக குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறும் என்று சிலர் நம்பினார்கள். பொருளாதாரம் சீர்குலைந்து நாடு நெருக்கடியை சந்திக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

எனினும், தாக்குதல்கள் இடம்பெற்று மூன்றே மாதங்களில் நாட்டை மீண்டும் உறுதியான நிலைக்கு கொண்டுவருவ தற்கு எங்களால் இயலுமாக இருந்தது. நாட்டை மீண்டும் உறுதியான நிலைக்கு கொண்டு வந்தவுடன் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன என்று நாங்கள் நினைக்கக் கூடாது.

கடந்த அரசு மிலேச்சத்தனமாக கடன்களைப் பெற்றதன் காரணமாக இன்று நாட்டில் பெரும் கடன் சுமை ஏற்பட்டுள் ளது. எதிர்வரும் 5 வருடங்களில் இந்தக் கடன் தொகையைச் செலுத்தி முடிக்கும் நோக்கில் ஏற்றுமதியை அதிகப்படுத்தி வருமானத்தை அதிகரிக்க வேண்டும். அதேபோன்று ஏனைய துறைகளிலும் முன்னேற்றம் அவசியம். - என்றார். (ஏ)

# பயங்கரவாத தாக்குதல் நடந்து நேற்றுடன் 3 மாதங்கள் நிறைவு

## பாதிக்கப்பட்டோருக்கு இதுவரை 26 கோடி ரூபா இழப்பீடு

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டு நேற்றுடன் 3 மாதங்கள் கடந்துள்ளன. பயங்கரவா தத் தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களுக்கு இதுவரை 26 கோடியே 50 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்பட் டுள்ளது என்று அரசு தெரி வித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி தேவாலயங்கள் மற் றும் விடுதிகளில் பயங்கர வாதக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதில் 200க்கு மேற்பட்ட வர்கள் உயிரிழந்தனர். 500க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்களில் உயி ரிழந்த 201 பேருக்கு 20 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வழங்கப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவங்களில் 503 பேர் காயங்களுக்குள்ளாகி யுள்ளனர் என்று தலைமை அமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது. அவர்க ளில் 442 பேருக்கு இழப்பீ டுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 43 வெளி நாட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான மதிப்பீ டுகள் மேற்கொள்ளப்பட் டுள்ள நிலையில் இவர்கள் இதுவரையில் இழப்பீட்டை பெற்றுக்கொள்ளவில்லை என்றும் தலைமை அலுவ லர் அலுவலகம் தெரிவித் துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவங் களால் சேதமடைந்த தேவாலயங்களை மீளச் சீரமைப்பதற்காக இரண்டு கோடி 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஏ)

# பெரமுனவின் வேட்பாளர் யார்? இன்னமும் இறுதி முடிவில்லை

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 22

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) அரச தலைவர் வேட் பாளர் யார் என்பது தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப் படவில்லை. எமது தரப்பில் 5 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது

ஒகஸ்ட் 10ஆம் திகதிவரை வேட்பாளர்கள் தெரிவு இடம்பெறும். பன்னாட்டு டன் இணைந்து நாட்டில் ஏதேனும் உடன்பாடொன்று எட்டப்படுமானால் அதை



முதலில் நாடாளுமன்றுக் குத் தெரியப்படுத்த வேண் டும்.

மக்களின் விருப்பங்களைத் தெரிந்துகொள்ள வேண் டும் என்பதே எமது நிலைப் பாடாகும். அதனைவிடுத் துத் திருட்டுத்தனமாக கைச் சாத்திடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அரச தலைவர் தேர்தல் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட் டுக்கொண்டிருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியினர் கூட்டணியொன்றை உரு வாக்கவும் முயற்சித்து வரு கிறார்கள். தோல்வியடைவ தற்கு எவ்வாறான கூட்ட ணியை அமைத்தாலும் அது பயனில்லாமல்தான் போகும்.

எமக்கு இந்த தேர்தலில் எவ் வித சவாலும் நிச்சயமாக இருக்காது. சிறுபான்மை யினரின் வாக்குகளும் கிடைக்கும் என்றே எதிர்ப் பார்க்கிறோம். அதில் எந்த வித பிரச்சினையும் கிடை யாது. எமது தரப்பில் 5 வேட்பாளர்களின் பெயர் கள் பரிந்துரைக்கப்பட்டுள் ளன.

இவர்களில் யார் சிறந்தவர் என்பதைத் தெரிவுசெய்து அறிவிக்க வேண்டியது தான் எனது கடமையாக இருக்கிறது. 10 ஆம் திகதி வரை இந்தப் பணியை நாம் மேற்கொள்வோம். - என்றார். (ஏ)



# கட்டுவாப்பிட்டிய தேவாலயம் திருத்தப்பட்டு நேற்று திறப்பு

கொழும்பு, ஜூலை 22

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கான நீர்கொழும்பு கட்டுவாப்பிட் டிய புனித செபஸ்தியார் தேவாலயம் சீரமைக்கப்பட்டு நேற்று மக்கள் வழிபாட்டுக் காகத் திறக்கப்பட்டது.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல் கம் ரஞ்சித் ஆண்டகை யால் நேற்றுக் காலை 8 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆலயம் மக்களின் வழிபாட்டுக்காக மீண்டும் திறக்கப்பட்டது. சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றன.

பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பலர் நேற் றைய வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கர வாதக் குண்டு வெடிப்பில் கட்டுவாப்பிட்டிய தேவால யத்தில் மாத்திரம் சுமார் 105 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். (ஏ)

# பிரிட்டன் படையுடன் சேர்ந்து ஒக்ரோபர் ஒப்பரேசன் ஈட்டி!

கொழும்பு, ஜூலை 22

இலங்கை - பிரிட்டன் படைகள் இணைந்து இந்த ஆண்டின் பிற் பகுதியில் 'ஒப்பரேசன்' ஈட்டி என்ற பெயரில் கூட்டு இராணுவ ஒத் திகைகளை மேற்கொள்ளவுள்ளன. ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி தொடக்கம், நவம்பர் மாதம் 4ஆம் திகதி வரை இந்தக் கூட் டுப் பயிற்சி 9 நாள்கள் நடைபெறவுள்ளன.

ஏதேனும் தீவிரவாதத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் நிகழ்ந் தால், தமது நாட்டவர்களை வெளியேற்றுவதை அடிப்படையாக கொண்டு பிரிட்டன் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கிறது.

இலங்கைப் படையினர் மனிதாபிமான உதவிகள், இடர் மீட்பு, மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களைக் கற்றுக்கொள் வதற்கு இந்தப் பயிற்சியைப் பயன்படுத்திக் கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டுப் பயிற்சி, தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டுப் பயிற்சிக்காக இலங்கையின் விமான நிலையங் கள், துறைமுகங்கள் மற்றும் மருத்துவமனைகள் பயன்படுத்தப் படவுள்ளன. ஏனைய மோதல் பகுதிகளில் பிரிட்டன் படைகள் பெற்றுக் கொண்ட உளவு மற்றும் காயமுற்றோரை மீட்பது தொடர் பான அனுபவங்களை இதன் போது வெளிப்படுத்துவார்கள்.

விடுதலைப் புலிகளை சிறிலங்கா இராணுவத்தினர் எப்படித் தோற் கடித்தனர் என்பதை பிரிட்டன் படையினர் அறிந்து கொள்வதற்கு இந்தக் கூட்டுப் பயிற்சி உதவும் என இலங்கை பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது. இந்தக் கூட்டுப் பயிற்சியை பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியகமும், இலங்கை அரசும் இணைந்தே ஏற்பாடு செய்துள்ளன. (ஏ)

# நீரோடையில் தவறி வீழ்ந்து முதியவர் சாவு

மஸ்கெலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூவுஸ்சீக் தோட்டப் பகுதியில் 70 வயதுடைய நபர் ஒருவர் நீரோடையில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற் றுப் பரிசோதனை ளுக்காக கிளங்கன் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஏ)

# விபத்தில் ஒருவர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 22

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திம்புள்ள பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கப் ரக வாகனம் ஒன்றும் முச் சக்கரவண்டி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் படுகாயத்துக்கு உள்ளான முச்சக்கர வண்டிச் சாரதி கொட் கலை பிரதேச மருத்து வமனையில் சேர்க்கப்பட் டுள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி கடுங்காயங்களுக் குள்ளாகியுள்ளார். கப் ரக வாகனம் குறித்த முச்சக்கரவண்டியை மோதி விட்டு நிறுத்தாமல் சென்றது.

பிரதேசவாசிகள் அதைத் துரத்திப் பிடிக்க முற்பட்ட போது கெப் ரக வாகனத்தின் சாரதி நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு சென்று சரணடைந்துள்ளார்.

அவரிடம் வாக்குமூலத்தை பெற்றுக்கொண்ட நாவலப்பிட்டி பொலிஸார் மேற்படி சாரதியை திம்புள்ள பத்தனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட் டது. திம்புள்ள பத்தனை பொலிஸார் கெப் ரக வாகனத்தின் சாரதியைத் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ஏ)

# தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை ஓகஸ்ட் 23 இல்

கொழும்பு, ஜூலை 22

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை அடுத்த மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இதுவரை பெற்றுக்கொண்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், அறிக்கையைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவுக்குழுவின் உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதி சில பொலிஸ் அலுவலர்கள் சாட்சியமளிக்கவுள்ளனர். அரச புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரி மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவும் தெரிவுக்குழுவில் வாக்குமூலம் வழங்கவுள் ளார்.

அவர் வாக்குமூலமளிக்கும் சந்தர்ப்பங்களில், ஊடகங்களுக்கு அனுமதியளிக்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

இவரைத் தவிர, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, திணைக்களத்தின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வருண ஜயசுந்தர மற்றும் அந்தப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் தரங்க பதிரன ஆகியோரும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் சாட்சியமளிக்கவுள்ளனர். (எ)

## ஷாபி தொடர்பாக விசாரணையை சி.ஐ.டியிடமிருந்து மாற்ற முடியாது

### பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பதில் பொலிஸ் மா அதிபர் கடிதம்



கொழும்பு, ஜூலை 22

குருணாகல் போதனா மருத்துவமனையின் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் நோய் தொடர்பிலான மருத்துவர் சேகு சியாப்தீன் மொஹமட் ஷாபி தொடர்பிலான விசாரணைகளை குற்றப்புலனாய்வுப்பிரிவிலிருந்து மாற்றுவது பல்வேறு சிக்கல்களை தோற்றுவிக்கும் என பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதனால் அந்த விசாரணைகளை வேறு பிரிவு ஒன்றுக்கு கையளிக்க முடியாது எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரட்ண தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

மருத்துவர் ஷாபி விவகாரத்தைச் சிறப்புக் குழுவொன்றிடமோ அல்லது எஸ்.ஐ.யூ எனப்படும் சிறப்பு விசாரணை பிரிவினரிடமுமோ கையளிக்க முடியுமா என பரிந்துரைக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு பதில் பொலிஸ்மா அதிபரை கேட்டிருந்த நிலையிலேயே இந்தப் பதில் அனுப்பப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ருவான் குணசேகர தெரிவித்தார். (எ)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் சாவு

கொழும்பு, ஜூலை 22

ரத்கம - மலீதுவ, கெகில்ல முச்சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.20 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வெவதெனிய பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இதுவரை அடையாளம் காணப்படாதநிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## பௌத்தர்களை ஆவேசப்படுத்தி கவனத்தைத் திசைதிருப்பச் சதி

### எஸ்.பி.திஸநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 22

பௌத்த மக்களை ஆவேசப்படுத்தும் வகையில் செயற்பட்டு, மக்களின் கவனத்தை திசைதிருப்ப அரசிலுள்ள சிலர் முயற்சித்து வருகின்றனர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ.திஸாநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பௌத்த தேரர்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். அவரது கருத்து, பௌத்த மத அடிப்படைவாதிகளிடத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கஜபாகு போர்க்கப்பலை வாழ்த்தியது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 22

இலங்கைக் கடற்படையில் அண்மையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பலான எஸ்எல்என்எஸ் கஜபாகுவுக்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது.

அமெரிக்க கடலோரக் காவல்படையில் இருந்து நீக்கப்பட்ட போர்க்கப்பல் ஒன்றை இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா கொடையாக வழங்கியிருந்தது. இந்தக் கப்பல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு, எஸ்எல்என்எஸ் கஜபாகு என்று பெயரிடப்பட்டு, தற்போது ஆழ்கடல் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

எஸ்எல்என்எஸ் கஜபாகு ஆழ்கடல் கண்காணிப்பில் முதலாவது போதைப்பொருள் கடத்தல் தடுப்பு நடவடிக்கையை சில நாள்களுக்கு முன்னர் மேற்கொண்டது. இலங்கையின் தென்பகுதி கடலில் 69 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருளை கடத்தி வந்த படகு ஒன்றை இந்தப் போர்க்கப்பல் கைப்பற்றியது.

இது குறித்து இலங்கைக் கடற்படை கீச்சகத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள நிலையில், அதற்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது.

"எஸ்எல்என்எஸ் கஜபாகு மாலுமிகள் வெற்றிகரமாக போதைப்பொருள் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொண்டதற்கு வாழ்த்துகள்.

அமெரிக்காவின் பரிசான இந்தக் கப்பல், இலங்கையின் இறைமையையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரிவுபடுத்து வதற்கு புதிய திறன்களை வழங்குகிறது." என்று அமெரிக்க தூதரகம் பதிலுக்கு கீச்சகப் பதிவு ஒன்றை இட்டுள்ளது. (எ)

## அரசியல் தேவைகளுக்காக அரசமைப்பை மாற்ற முடியாது

### முஜிபூர் ரஹ்மான் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 22

அரச தலைவரின் பதவி காலம் தொடர்பில் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் முதலில் தெளிவுப்படுத்திக் கொள்ளவேண்டும். அரசியல் சுய தேவைகளுக்காக அரசமைப்புக்கு அப்பாற்பட்டு செயற்படுவது முரணானதாகும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவரின் பதவிக் காலம் எத்தனை வருடங்கள் என்ற சந்தேகம் சிறிலங்கா சுதந்திர கட்சியினருக்கு மீண்டும் ஏற்பட்டுள்ளது ஆறு வருடகாலமாக அரச தலைவரின் பதவிக் காலம் 19ஆவது திருத்தத்தின் ஊடாக ஐந்து வருடமாகக் குறைக்கப்பட்டமையை சுதந்திர கட்சியினர் நன்கு அறிவார்கள். அரசமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் எவ்விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது அறியாமல் எவரும் ஆதரவு வழங்கவில்லை.

அரச தலைவரின் பதவி காலத்தை ஐந்து வருடத்துக்குக்கு மேல் நீடித்துக் கொள்ள முடியாது. பதவியில் மேலதிகமாக இன்னும் குறுகிய காலம் இருக்கலாம் என்ற நோக்கத்திலே பதவி காலம் தொடர்பில் தொடர்ந்து சந்தேகம் எழுப்பப்படுகின்றது. அரசியல் தேவைகளுக்காக அரசமைப்பைத் தேவைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ள முடியாது - என்றார். (எ)

## தற்போதைய காலநிலையால் டெங்கு பரவும் அபாய நிலை

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலையால் டெங்குக் காய்ச்சல் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டு வருகின்றனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 29 ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, டெங்குக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் வகையில் சிரமதானப் பணிகள், புகை விசிறும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாள்களில் க.பொ.த. உயர்தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெறவுள்ளதால், பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளை நுளம்புகள் அற்ற பகுதிகளாகப் பிரகடனப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் மாவட்ட செயலகங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் டெங்கு ஒழிப்புப் பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர் தெரிவித்துள்ளார். (எ)

## அம்பாந்தோட்டையில் முதலீடு: பிரான்ஸ் முதலீட்டாளர் ஆர்வம்

கொழும்பு, ஜூலை 22

அம்பாந்தோட்டை துறைமுகத்திலும், தோட்டத் தொழில் துறையிலும் முதலீடுகளைச் செய்வதற்கு பிரான்ஸ் முதலீட்டாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர் என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்டு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை காலை மகிந்த ராஜபக்சவின் அதிகாரபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறுள்ளது.

அரசியல் மற்றும் பொருளாதார கொள்கை ரீதியாக உறுதியான நிலையை ஏற்படுத்தி, வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க உகந்த சூழலை உருவாக்கினால் இலங்கைக்குப் பல முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன என்று பிரான்ஸ் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பூகோள போக்குவரத்தின் இதயமாக - மூலோபாயம் முக்கியத்துவம் பெற்ற இடத்தில் அம்பாந்தோட்டை துறைமுகம் அமைந்துள்ளது. எந்தவொரு முதலீட்டாளருக்கும் இது சிறந்த வாய்ப்பாக இருக்கும். என்றும் மகிந்த ராஜபக்சவிடம் அவர் தெரிவித்தார் - என்று கூறப்படுகின்றது. (எ)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கத் தனிநபர் தீர்மானம்

## மகிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 22

நிறைவேற்று அதிகார அரசதலைவர் முறைமையை ஒழிப்பதற்கான தனிநபர் தீர்மானம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிறைவேற்று அதிகார அரச தலைவர் ஆட்சிமுறை நாட்டில் இருக்கும் வரையில் அரச தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் சகோதரர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் கூட, அவர்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது.

நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவர் பதவியை உடனடியாக இல்லாமல் செய்ய வேண்டும். அது நாட்டிற்கு எந்த நன்மையும் செய்யவில்லை. நிறைவேற்று அதிகார அரச தலைவர்களாகப் பதவியேற்றவருமே அதைஒழிக்கவில்லை. இந்தப் பதவி ஒழிக்கப்படாததன் விளைவாகவே நாட்டில் இப்போது இரண்டு தலைவர்கள் இருக்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கப் போவதாக ஊக்கமளித்த மக்கள் விடுதலை முன்னணி இப்போது அமைதியாக உள்ளது. உண்மையிலேயே மக்கள் விடுதலை முன்னணி ஆர்வமாக இருந்திருந்தால், நிறைவேற்று அரச தலைவர் பதவியை ஒழிப்பதற்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கலாம்.

நிறைவேற்று அதிகார அரச தலைவர் பதவியை ஒழிக்க நான் நாடாளுமன்றத்தில் ஒரு தனிநபர் தீர்மானத்தை முன்வைக்கவுள்ளேன் - என்றார். (எ)

# தும்புத் தொழிற்சாலையில் மிகப்பெரும் தீ விபத்து

கொழும்பு, ஜூலை 22

மாதம்பே சுதுவெல்ல என்னும் பிரேதேசத்தில் உள்ள தும்புத்தொழிற்சாலையில் மிகப்பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரைக் கண்டறியப்படவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# மைத்திரியை சந்திக்காதமை பெரும் தவறான விடயம்தான்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 22

வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த வரலாற்றைச் சிதைக்கும் செயற்பாட்டைச் சிங்கள தேசம் செய்து வருகின்றது. அதை எதிர்க்கும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் கலந்துகொள்ளவில்லை என்ற குறை உள்ளது. இது உண்மையில் பெரும் தவறுதான்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

முல்லைத்தீவு, மாங்குளம் பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் நாங்கள் எதிர்பார்த்த விடயங்கள் கைகூடவில்லை. நம்பி இருந்த விடயங்கள் கைநழுவிப்போகும் நிலையே உள்ளது. அபிவிருத்தி என்று பார்கின்றபோதும் அடிப்படை வசதிகள் இல்லாத மக்களாக நாங்கள் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றோம்.

நம்பிக்கைதான் வாழ்க்கை. அந்த நம்பிக்கையோடு தீர்வுத் திட்டம் கிடைக்கும் அல்லது அரசு எங்களின் அடிப்படை தேவைகளைத் தீர்க்கும் என்ற வகையில் நாங்கள் செயற்படுபவர்களாக நாம் இருக்கின்றோம். கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தி திட்டங்களை செய்திருக்கின்றோம். இன்னும் செய்யக் காத்திருக்கின்றோம்.

எமது பிரதேசத்தில் இப்போது புத்த மதத்தைப் பரப்பும் ஒரு மோசமான சூழல் உள்ளது. எமது கோவில்களை அழித்து விட்டு புத்த விகாரைகளை அமைக்க முயற்சிக்கின்றனர். நீராவிப்பிள்ளையார் ஆலயத்தில் இப்படியான சூழலே உள்ளது. அதைப்போன்று கன்னியா வெந்நீர் ஊற்று எமது மூதாதையர்கள் வழி தமிழர்களுக்குச் சொந்தமான இடம். அங்குள்ள ஆலயத்தையும் அழித்துவிட்டு புத்த விகாரை அமைக்க முயற்சிக்கின்றனர்.

இவற்றை எதிர்க்கும் விதமாகக் கடந்த வியாழக்கிழமை அரச தலைவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் கலந்துகொள்ளவில்லை என்ற குறை மக்கள் மத்தியில் உள்ளது. உண்மையில் அது பெரும் தவறுதான் என்பதை நான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

என்னாலும் கலந்துகொள்ள முடியவில்லை. எனக்கு நீதிமன்றில் வழக்கு இருந்தது. மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில் நான் விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசுக்கு எதிராகக் சதி செய்தேன் என்று என்மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இப்போது நான் பிணையில் இருக்கின்றேன். அந்த வழக்குக்காக அநுராதபுரம் நீதிமன்றத்துக் குச் சென்ற காரணத்தால் கூட்டத்துக்குச் செல்ல முடியவில்லை. எமது கடமையை யார் செய்தாலும் அதை வென்றெடுப்பதற்குக் கூட்டுச்சேர வேண்டும்- ஒன்றிணைய வேண்டும்.

அந்த விடயத்தில் நாங்கள் தவறிழைத்து விட்டோமா என்ற கேள்வி எழுகின்றது. எமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கும், உரிமைகளை வென்றெடுக்கவும் அனைவரும் ஒன்றிணையவேண்டும் - என்றார். (எ-ரி3)



# ஆயுததாரிகள் எனப் பரவிய தகவலால் பெரும் பரபரப்பு

அம்பாறை, ஜூலை 22

அம்பாறை, சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 12 கருவாட்டுக்கல் எனும் இடத்தில் ஆயுததாரிகள் இருவர் தென்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டமை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை அங்கு பதற்ற நிலமை ஏற்பட்டது.

தனக்குச் சொந்தமான காணியில் இருவர் ரி56 ரகத் துப்பாக்கியுடன் தென்பட்டனர் என்றும் அவர்கள் தன்னைச் சுட முயன்றனர் என்றும் காணியின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

அதையடுத்து அங்கிருந்துதான் தப்பியோடி வந்து விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் அந்தப் பகுதியில் இராணுவத்தினர் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டதுடன், விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை. இந்தச் சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. (எ)

# கடல் பகுதிகளில் காற்று பலம்பெறும்

## வளிமண்டலவியல் திணைக்களம் கடும் எச்சரிக்கை விடுத்தது

கொழும்பு, ஜூலை 22

நிலவிவரும் சீரற்ற காலநிலையினால் நாட்டிலும் நாட்டைச்சூழவுள்ள கடல் பிரதேசத்திலும் பலத்த காற்று வீசக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மீனவர்களை கடலுக்குச் செல்ல வேண்டாமெனவும் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கும் என்பதால் பொதுமக்களும், கடற்படையினரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். குறிப்பாக கடற்கரை பிரதேசங்களில் குடிசை வீடுகளில் வாழ்வோர் உடனடியாக பாதுகாப்பான பிரதேசங்களை நோக்கிச் செல்ல வேண்டும்.

அத்துடன் வீடுகளின் கூரைத் தகடுகள் மற்றும் பெரிய விளம்பரப்பலகைகள் தூக்கி எறியப்படலாம் என்பதால் இதனால் இடம்பெறக்கூடிய உயிர், உடமைசேதங்களை தவிர்க்க முயற்சியுங்கள்.

இந்தக் காலநிலையால் கரையோரங்களிலுள்ள தாழ்வான பிரதேசங்கள் கடல் நீரில் மூழ்கும் அபாயம் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. எச்சந்தர்ப்பத்திலும் பலத்த காற்று வீசலாம் என்பதால் மலைப் பிரதேசங்களிலும் கரையோரங்களிலும் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

இதேநேரம் காலநிலை சீரற்று இருப்பதனால் நிலமை வழமைக்கு திரும்பும்வரை அநாவசியமாக வீதிகளில் இருப்பதனையும் தூர இடங்களுக்கு பயணம் செய்வதனையும் தவிர்த்துக் கொள்வது சிறந்தது.

அத்துடன் வீதிகளில் அல்லது வீடுகளுக்கு மேல் முறிந்து கிடக்கும் மரங்கள் மற்றும் மின்கம்பிகளால் மின்சாரத் தாக்கம் ஏற்படக்கூடும் என்பதை பொதுமக்கள் நினைவில் நிறுத்திக் கொள்வது அவசியம், நாடு முழுவதும் பலத்த காற்று வீசுவதற்கான வாய்ப்பு உள்ளபோதும் வடமேல், மேல் மற்றும் தென் மாகாண கடல் பிரதேசங்களில் காற்றின் வேகம் கடுமையாக இருக்குமென அறியப்பட்டுள்ளது. நாட்டின் மேல், தெற்கு, மத்திய, சபரகமுவ, வடமேல், வட மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70 தொடக்கம் 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் இதனைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் - என்றுள்ளது. (ம)

# மின் தடை வழமைக்கு

கொழும்பு, ஜூலை 22

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த மின் விநியோகத்தடை தற்போது வழமைக்கு திரும்பிக் கொண்டிருப்பதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் காணப்பட்ட கடும் காற்றுக் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு முதல் பல பிரதேசங்களுக்கு மின் விநியோகத் தடை ஏற்பட்டிருந்ததாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி மாத்தறை, காலி, தெனியாய, ஹக்மன, அகலவத்த, இரத்தினபுரி, பலாங்கொடை, ருவன்வெல்ல, கலவான மற்றும் புளத்கொஹிபிட்டிய ஆகிய பிரதேசங்களுக்கு ஏற்பட்ட மின் விநியோகத் தடை தற்போது சீராக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# 2 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 22

நாட்டின் சில பகுதிகளில் நிலவிவரும் அசாதாரண காலநிலை மாற்றத்தினால் இரு மாவட்டங்களுக்குத் தொடர்ந்தும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி அறிவித்துள்ளார்.

தேசிய கட்டட ஆராச்சி நிலையத் தகவல்களின்படி இரத்தினபுரி மாவட்டத்தின் இம்புல்பே பிரதேச செயலக பகுதிக்கு இந்த சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்புல்பே வேவல்வத்தை பாதையை பயன்படுத்தும் போது பொது மக்கள் மிகுந்த அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை நுவரெலிய மாவட்டத்தில் கொத்மலை பிரதேசத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிலைய தகவல்களின்படி அடையாளம் காணப்பட்ட இடங்களிலுள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள பொது மக்கள் தற்காலிகமாக அப்பிரதேசங்களிலிருந்து ஒதுங்கி பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்ல வேண்டியது. அவசியமானதாகும் என்றும் பிரதீப் கொடிப்பிலி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## சு.கவின் கூட்டம்

கொழும்பு, ஜூலை 22
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை கொழும்பில் நடைபெறவுள்ளது.
அரச தலைவர் தேர்தல், புதிய அரசியல் கூட்டணி உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளன.
அத்துடன், மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டமா அதிபர் ஊடாக உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோருவதற்கு எடுத்த முடிவு தொடர்பில் இதன்போது செயற்குழு உறுப்பினர்களுக்கு அரச தலைவர் விளக்கமளிக்கவுள்ளார்.
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி அமைக்கும் முயற்சி கைகூடாத பட்சத்தில் அடுத்து எவ்வாறான அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பது என்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரியவருகின்றது. (ஒ.5)

## நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை பிக்குகளாலேயே தீர்க்கமுடியும்

### கூறுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஜூலை 22
தற்போது நாடு எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு பிக்குகளால் மாத்திரமே தீர்வு வழங்க முடியும். அரசியல்வாதிகள் தயவு செய்து விலகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொடே அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
கலென்பிந்துனுவெள பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பொதுபலசேனா அமைப்பின் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இஸ்லாமிய அடிப்படைவாதத்தை நாட்டில் இருந்து முழுமையாகத் துடைத்தெறிய வேண்டுமாயின் பிக்குகள் அரசியல் பேதங்களை துறந்து பௌத்த சாசனத்துக்கு அமைய ஒன்றுப்பட்டுச் செயற்பட வேண்டும். அத்துடன் பௌத்த மதத்தின் மரபுரிமைகளும், கோட்பாடுகளும் பாதுகாப்பப்பட வேண்டுமாயின் சிங்கள இளம் தலைமுறையினர் அனைவரும் பௌத்த மதத்தை முழுமையாக முறையாக பின்பற்ற வேண்டும்.
பௌத்த நாட்டின் மரபுரிமைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றது. அரசியல்வாதிகள் அனைவரும் ஆட்சியில் இருக்கும் காலத்தில் எவ்வளவு நிதி சேமித்துக் கொள்ளலாம் என்று மாத்திரமே நினைக்கின்றார்களே தவிர நாடு தொடர்பில் எவ்வித அக்கறையும் கொள்வது கிடையாது.
பௌத்த மத சாசனத்துக்கு அமைய அனைத்து பிக்குகளும் அரசியல் பேதங்களை துறந்து ஒன்றுப்பட வேண்டும். சிங்கள இளைஞர்களின் கைகளிலே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது - என்றார். (ஒ.5)

---

### தீர்வு...

இவ்வாறானதொரு நிலையில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று நடைபெற்ற போதே, ரணில் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
காலை 10.30 மணிக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஆரம்பமான உயர்பீடக் கூட்டம் மாலை 3.30 வரை மிகக் காரசாரமான பல விவாதங்களுடனும் வாதப்பிரதிவாதங்களுடனும் நடைபெற்றது.
இங்கு பிரதானமாக கல்முனை உப பிரதேச செயலக விவகாரம், மீண்டும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பது தொடர்பில் ஆராயப்பட்டது.
கல்முனை உப பிரதேச செயலக விவகாரம் கடுமையாகச் சூடுபிடித்துள்ளதால் இது உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றகீப் வலியுறுத்தினார். இதையடுத்து சகல உயர்பீட உறுப்பினர்களும் இந்த விடயத்தை யாருக்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்க முடியாது என்வும், அரசுக்கு நிபந்தனைகளை விதித்து உடனடியாகத் தீர்வைப் பெற வேண்டும் எனவும் கூட்டாகக் குரல் கொடுத்தனர்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கையான அமைச்சுப் பதவிகளை மீளப் பொறுப்பெடுப்பது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் கடுமையாக இருந்தன.
'முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் எந்த முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சுப் பதவிகளை ஏற்கக் கூடாது. கல்முனை வடக்கு உப பிரதேச செயலகப் பிரச்சினை அடங்கலாக இப்போது மிக முக்கிய பிரச்சினைகளாக மக்களுக்கு மாறியிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் யாரும் அமைச்சுப் பதவிகளை மீள ஏற்கக்கூடாது' என்று அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான ஹரீஸும், பைசால் காசிமும் இன்னும் பலரும் வலியுறுத்தினர்.
'இதனை அரசுக்கு நிபந்தனையாக வைத்து கல்முனை பிரச்சினை ஓரிரு வாரங்களில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். சகல பிரதேசங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற இந்த அரசு எமது தலைமைக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாக்குறுதியை வழங்கிவிட்டு மறுகணமே கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்ற சில முன்னாயத்தங்களை செய்திருந்தது. இது முஸ்லிம் சமூகத்துக்கு அவமானமான செயல். இது முஸ்லிங்களின் முகத்தில் கரிபூசியதைப் போன்றது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் பேசியதைப் பெரும்பான்மை உறுப்பினர்களும் கட்சியின் தலைமைக்கு வலியுறுத்திப் பேசினர்.
இங்கு பேசிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், எதிர்வரும் காலத்தில் அரச தலைவர் தேர்தல் ஒன்றைத் தலைமை அமைச்சர் எதிர்கொண்டுள்ள இந்தச் சூழ்நிலையில் கல்முனை விவகாரம் சம்பந்தமாக, தனக்கு முன்னிலையில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தந்த வாக்குறுதியை மீறிவிட்டார். எந்தக் காரணத்தைக் கொண்டும் இழுத்தடிப்பு செய்ய முடியாது. இந்த விடயங்களுக்கு ஓரிரு நாளில் அரசு நிரந்தரத் தீர்வைத் தரவேண்டும். அரசு எந்தத் தீர்வையும் தராமல் யாரும் அமைச்சை மீளப் பெறப்போவதில்லை' எனக் காட்டமாகத் தெரிவித்தார். (ஒ.5,22)

### சுட்டுக்...

கப்பட்டு உயிரிழந்திருந்தார். தாயின் அரவணைப்பில் வளர்ந்திருந்தார்.
இளைஞனின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்றது.
உயிரிழந்த இளைஞனின் முதுகுப் பக்கமாகப் பாய்ந்த துப்பாக்கிச் சன்னம் முதுகெலும்பில் பட்டு இதயத்தைத் தாக்கியுள்ளது என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மல்லாகம் பதில் நீதிவான், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேற்று அதிகாலை நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர். (ஒ.5,26)

### எனது...

தெரிவித்தார்.
மானிப்பாய் - இணுவில் இணைப்பு வீதியில், சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம் (செல்லத்துரை பாடசாலை) முன்பாக நேற்று முன்தினம் இரவு பொலிஸாரார் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டார்.
உந்துருளியில் வந்த இளைஞன் மீதே பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படும்போது உயிரிழந்துள்ளார். இளைஞனின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டது.
வாள்வெட்டுக்குழுவைச் சேர்ந்தவரே சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும், வாள்வெட்டுச் சம்பவத்தில் ஈடுபட முனைந்தபோதே சுடப்பட்டார் என்றும் தெரிவித்த மானிப்பாய்ப் பொலிஸார் கொல்லப்பட்டவரிடம் இருந்து மீட்கப்பட்ட ஆயுதங்கள் என்று மூன்று வாள்களையும் காண்பித்திருந்தனர்.
கொல்லப்பட்ட இளைஞனுடைய தாயார் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வந்தார். அவர் கொல்லப்பட்டது தனது மகன்தான் என்று தெரிவித்தார்.
மல்லாவியில் இடம்பெற்ற கொண்டாட்டம் ஒன்றுக்கு தான் சென்றதாகவும், தன்னுடன் வருமாறு கேட்டபோது அவன் தனியாக வீட்டில் நின்றதாகவும் கூறினார். அத்துடன் தனது மகன் வாள்வெட்டுக்குழுவைச் சேர்ந்தவன் அல்ல. தந்தையின்றி எனது அரவணைப்பில்தான் வாழ்ந்தான் என்று தெரிவித்து அந்தத் தாய் கண்ணீர்விட்டழுதார். (ஒ.5,21,26)

### மானிப்பாய்...

டுத்தப்பட்டுள்ளது. பிரச்சினைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. யாரும் பதற்றப்படத் தேவையில்லை. மானிப்பாய் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை' என்றார் ரவி விஜயகுணவர்த்தன. (ஒ.5,21,26)

### தமிழ்க்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இப்போது விமர்ச்சிக்கின்ற இதே கட்சிகள் நாங்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று கடந்த 3 ஆண்டுகளாக சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது கிராம எழுச்சி மூலம் செய்யத் தொடங்கியதும் இது ஒரு லஞ்சம் எனக் கூறுகிறார்கள். ஆனால் இது ஒரு லஞ்சமோ என்னவோ எனக்கு அதைப் பற்றி கவலையில்லை. இதை நிச்சயமாக மக்கள் வரவேற்கிறார்கள்.
30 ஆண்டு காலப் போரில் பாதிப்படைந்த தமது பகுதிகள் கொஞ்சமாவது அபிவிருத்தி அடைய வேண்டும் என்று மக்கள் இதனை வரவேற்கிறார்கள். சில இடங்களில் 50, 60 ஆண்டுகளாக செப்பனிடப்படாத வீதிகள் எல்லாம் இதன் மூலம் செப்பனிடப்படுகின்றன. இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் செல்வாக்கு ஏற்பட்டுவிடும் என்று கருதுகிறார்கள். இதனால் இதில் குறை கூறுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை அரசியல் செல்வாக்கை தருகிறதா, இல்லையா என்று கவலையில்லை. எமது மக்களுக்கு ஏதாவது செய்ய முடியுமென்றால் செய்ய வேண்டும்.
நாங்கள் மாத்திரமில்லை, நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கும் அரசால் 50 மில்லியன் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியில் சேமமடுவில் ஒரு வீதி திருத்துகிறார்.
அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் சொன்னார். ஆனால் அவர் ஒரு பிழை விட்டார். அதனை தன்னுடைய கட்சிகாரனுக்கு சொல்லவில்லை. இதனால் சிவசக்தி ஆனந்தன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதுதான் உண்மை. இதையெல்லாம் ஒரு அரசியல் ரீதியான கருத்தாகவே நான் பார்க்கிறேன். கூட்டாட்சி (சமஷ்டி) கேட்ட எங்களுக்கு சமுர்த்தி மக்களுக்கு கிடைக்கின்றதென்றால் அதை வேண்டாம் என்று விட முடியாது. அதையும் பெற வேண்டும். கூட்டாட்சியையும் கேட்க வேண்டும். இதான் என்னைப் பொறுத்தவரை எமது கட்சியைப் பொறுத்தவரை அடிப்படைக் கொள்கை - என்றார். (ஒ.5)

### இரண்டு...

வருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.
வாள்களுடன் அட்டகாசம் செய்து பொலிஸார் மறித்தும் நிற்காது சென்றதாலேயே சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,21,26)

### இளைஞர்கள்...

குறிப்பிட்டிருந்தனர்.
இந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நான்கு இளைஞர்கள், உயிரிழந்த இளைஞனின் சடலத்தைப் பார்வையிட வந்தனர். அவர்கள் உயிரிழந்த இளைஞனை அடையாளம் காட்டினர். இதனையடுத்து நான்கு பேரையும் துருவித் துருவி விசாரித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றனர். அவர்களைத் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டனர். நேற்று மாலையே அவர்களை விடுவித்தனர். (ஒ.5,21,26)

### ரணில்...

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டணி அமைக்கலாம். ஆனால், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி சார்பிலேயே வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவார். ரணில் அணியினரைப் படுதோல்வியடையச் செய்யும் வேட்பாளரை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவுசெய்வார். இவ்வாறு மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் எமது அணிக்குள் குழப்பம் இருக்கின்றமை உண்மைதான். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி மாதிரி எமது அணிக்குள் பெரிய குழப்பம் இல்லை. எமது அணியில் எந்த வேட்பாளர் களமிறங்கினாலும் அவர் ரணில் அணியினரைத் தோற்கடிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். எனவே, சிறந்த வேட்பாளரைத் தெரிவுசெய்யக்கூடிய தகுதி மகிந்த ராஜபக்சவுக்கே உள்ளது. அவரே வேட்பாளரைத் தெரிவுசெய்வார்.
ராஜபக்ச ஆட்சியில் இந்த நாடு அபிவிருத்தி கண்டது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. ஆனால், இன்று எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. இதற்கு ரணிலின் ஊழல், மோசடி ஆட்சியே பிரதான காரணம். இதற்கெல்லாம் விரைவில் முடிவுகட்டப்படும் - என்றார். (ஒ.5,2[illegible])

### பிள்ளையான்...

அரசியல் நலன் விரும்பிகளும் நண்பர்களும் கேட்[illegible] கொண்டதற்கிணங்கவே பிள்ளையானைச் சந்தித்த[illegible] அமைச்சர் மனோ கணேசன், தெரிவித்தார்.
இந்த சந்திப்பின்போது, பொதுவான நட்பு அரசியல் சம்பந்தமாகவும் கடந்த கால, எதிர்கால அரசியல் நடவடிக்கைக[illegible] தொடர்பிலும் கலந்துரையாடியதாகத் தெரிவித்த அமைச்[illegible] மனோ கணேசன், எதிர்கால அரசியல் நகர்வுகள் தொடர்பில் பேசிய விடயங்களைத் தற்போது தெரிவிக்க விரும்பவில்லை என்றும் கூறினார். (ஒ.5)

# பிரிட்டனின்கப்பலைக் கைப்பற்றியது ஈரான்

## ஹோர்மோஸ் நீரிணைப் பகுதியில் பதற்றம்
## பிரிட்டன் எச்சரிக்கை



தெஹ்ரான், ஜூலை 22
லண்டனில் பதியப்பட்ட பிரிட்டனின் கொடியை ஏந்திய 'ஸ்டினா இம்பேரோ' என்ற எண்ணெய்க் கப்பல் ஹோர்மோஸ் நீரிணையூடாகப் பயணித்தபோது ஈரான் அதைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே பதற்றங்கள் நிலவிக்கொண்டிருக்கும் சூழலில் இது நடந்துள்ளது.


குறித்த கப்பலை ஈரானின் புரட்சிகரக் காவல் படை கைப்பற்றியது என ஈரான் ஊடகங்கள் தெரிவித்தன. இருப்பிடம் மற்றும் நகர்வு ஆகியவற்றைச் சுட்டும் தனது கருவியைச் (ஜி.பி.எஸ்.) செயலிழக்கச் செய்ததுடன், ஹோர்மோஸ் நீரிணைக்குள் நுழையாமல், எச்சரிக்கைகளை அலட்சியப்படுத்தி வெளியேசென்றது உட்படப்பலவிதிகளைப்பிரிட்டனின் குறித்த கப்பல் மீறியதாலேயே அதைக் கைப்பற்றியதாக ஈரான் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. வளைகுடாவில் பறிமுதல் செய்யப்பட்ட தமது எண்ணெய்க் கப்பலை ஈரான் விடுவிக்கவில்லை என்றால்கடும்விளைவுகளைச்சந்திக்க வேண்டியிருக்கும் எனப் பிரிட்டனின் அயலுறவுச் செயலர் ஜெரிமி ஹண்ட் தெரிவித்தார். இதற்கு முன்னர் கடந்த 11ஆம் திகதியன்று, வளைகுடாக் கடற்பரப்பில் பிரிட்டனின் எண்ணெய்க் கப்பலைத் தடுப்பதற்கு ஈரான் படகுகள் மேற்கொண்ட முயற்சி, பிரிட்டனின் கடற்படைக் கப்பலால் முறியடிக்கப்பட்டிருந்த நிலையில்இந்தச்சம்பவம்நடந்துள்ளது. தனதுஎண்ணெய்க்கப்பலைப்பிரிட்டன் தடுத்துவைத்திருப்பதற்குப்பதிலடிவழங்கப்படும் என்று ஈரான் முன்னதாக மிரட்டல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா உட்பட்ட உலகின் பலம் பொருந்திய நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்றில் ஈரானும் அங்கம் வகிக்கின்றது. கடந்த வருட முடிவில் இந்த ஒப்பந்தத்தில் இருந்துவிலகிய அமெரிக்கா, ஈரான் மீது தடைகளை விதித்தது. அமெரிக்கா - ஈரான் முறுகல் ஆரம்பமானது. குறித்த ஒப்பந்தத்தில் அங்கம்வகிக்கின்ற ஐரோப்பிய நாடுகள் தன்மீதான அமெரிக்காவின் தடைக்குத் தீர்வு காண வேண்டும் என்று ஈரான் வலியுறுத்தி வந்தது. தீர்வு எட்டப்படாத நிலையில் அது தனது யுரேனியச் செறிவை அதிகரித்தது. ஐரோப்பிய ஒன்றியம் சார்பிலும் ஈரான் மீது தடைகள் விதிக்கப்பட்டன. அந்த வகையில் தமது தடையை மீறிச் சிரியாவுக்கு எண்ணெயைக் கொண்டு சென்றதாக ஜிப்ரால்டர் கடற் பரப்பில் வைத்து ஈரானின் எண்ணைக் கப்பலைக் கைப்பற்றியது பிரிட்டன். தமது கப்பலை விடுவிக்காவிடில் பெரும்பிரச்சினையைச்சந்திக்கவேண்டியிருக்கும் என்று எச்சரித்தது ஈரான்.


## எரிவாயுநிலையத்தில்விபத்து சீனாவில் 15 பேர் சாவு

பீஜிங், ஜூலை 22
சீனாவில் எரிவாயு நிலையம் ஒன்றில் நடந்த வெடி விபத்தில் 10பேர்சாவடைந்தனர். சீனாவில்ஹெனான்மாகாணத்தின் இமா நகரத்திலுள்ள எரிவாயு நிலையம் ஒன்றிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் நடந்தது. இதில் 19 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்துஏற்பட்டதற்கான காரணம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
இந்த விபத்துக் காரணமாக ஏற்பட்ட அதிர்வுகள் 3 கிலோ மீற்றர்தொலைவுவரைஉணரப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது. சீனாவில்கடந்தமார்ச்மாதம்இரசாயனத்தொழிற்சாலையில் ஏற்பட்டவிபத்தில்60பேர்சாவடைந்ததும், 2015ஆம்ஆண்டு ஏற்பட்ட விபத்தில் நுற்றுக்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்து, பலர் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



## ஆப்கானில்வான்தாக்குதல் 28 தலிபான்கள் சாவு

காபுல், ஜூலை 22
ஆப்கானிஸ்தானில் இயங்கி வரும் தலிபான் ஆயுததாரிகளைக்குறிவைத்துநடத்தப்பட்டவான்தாக்குதலில்28பேர் கொல்லப்பட்டதாக ஆப்கான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஆப்கானிஸ்தானின் ஏ 26 ரக போர் வானூர்தியால் வ்பரியாப் மாகாணத்தின் பில்சிராக் மாவட்டத்தில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தலிபான்களின் மறைவிடம்என்றுகருதப்படும்பகுதிஒன்றைக்குறிவைத்து நடத்திய குறித்த தாக்குதலியே 28 தலிபான்கள் சாவடைந்தனர். இராணுவத்தின் இந்த வான் தாக்குதலில் தலிபான்கள்கொல்லப்பட்டது குறித்துத்தலிபான்கள்தரப்பில்எந்தவிதமான பதிலும் இதுவரை அளிக்கப்படவில்லை.



## அப்போலோ 11 நிலவுப் பயணத்தில் பணியாற்றிய பெண்

வோஷிங்டன், ஜூலை 22
மனிதன் நிலவில் கால் பதித்த 50ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் உலகம் முழுவதும் நடந்து வருகிறது. 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி நிலாவுக்குப் பயணத்தை மேற்கொண்டது அப்போலோ 11 என்கிற விண்கலம். அதில் நீல் ஆம்ஸ்ரோங் உள்ளிட்ட மூவர்பயணித்தனர். அவர்களின் நிலவு நோக்கிய பயணத்துக்காக அமெரிக்காவில் இருந்த நாஸாவின் கட்டுப்பாட்டு அறையில் நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளும், பொறியாளர்களும்அயராதுபணியாற்றினர். அந்தக் கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றிய ஒரேபெண்மணிஜோஆன் மார்கன். அவருக்குத் தற்போது 78 வயது. அப்போலோ 11 நிலவுக்குப் பயணித்த அந்தநேரம், அவருக்கு வயது 28. இவர் தகவல்தொடர்பு வழித்தடங்களுக்குப் பொறுப்பாளராக இருந்ததோடு, அப்போலோவைவிண்வெளிக்குச்சுமந்துசென்ற சாட்டன் 5 ரொக்கெட்டின் கண்காணிப்பு இயந்திரங்களின் செயற்பாடு மற்றும் நலனையும் கவனித்து வந்தார். அப்போலோ 11 பயணம் குறித்துத்தற்போது அவர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியின்போது, அது மிகவும் உற்சாகமான அனுபவம். அப்போலோ 11 விண்ணில் பாய்வதற்காக ஐந்து ஆண்டுகள்அவர்களோடுநானும் பணியர்ற்றியுள்ளேன் என்று உணர்ச்சி ததும்பக் குறிப்பிட்டார்.



## அமெ.வில்வெப்பம் உயரும்!
### வானிலையாளர்கள் எதிர்வுகூறல்

வோஷிங்டன், ஜூலை 22
அமெரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் எதிர்வரும் நாள்களில் மிகக் கடும் வெப்பமான வானிலை நிலவும் என அமெரிக்க வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர். அமெரிக்காவின் முக்கிய நகரங்களான நியூயோர்க், வோஷிங்டன், கிழக்குக்கடற்கரையில்இருக்கும்போஸ்டன் மற்றும் மத்திய மேற்குப் பகுதிகள் என மேற்குறித்த பிரதேசங்களில் வசிக்கும் 200 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் இந்த வெப்ப அதிகரிப்பால் பாதிக்கப்படலாம் என்று எதிர்வுகூறப்பட்டிருக்கிறது. சில இடங்களில், 38 டிகிரி செல்சியஸைவிட அதிகமாகவெப்பம்பதிவாகலாம்என்றும் அமெரிக்கா மட்டுமின்றி, கனடாவின் சில பகுதிகளும் இந்த வெப்பத்தால்பாதிக்கப்படும்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துருக்கி மீது தடை இன்னும் முடிவாகவில்லை!
### ட்ரம்ப் தெரிவிப்பு



வோஷிங்டன், ஜூலை 22
துருக்கிமீதுபொருளாதாரத்தடைவிதிப்பது குறித்து முடிவு ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். ரஷ்யாவிடமிருந்து எஸ் 400 ரக ஏவுகணையை வாங்கியதால் துருக்கிக்கு அமெரிக்கா எவ் 35 ரக போர் வானூர்தியை விற்காது என்று ட்ரம்ப் கூறினார். இதன் காரணமாக அமெரிக்கா, துருக்கி மீது பொருளாதாரத்தடைகள்விதிக்கக்கூடும் என்றுஎதிர்பார்க்கப்பட்டது. இந்தநிலையில், இதுகுறித்துக் கருத்துரைத்த ட்ரம்ப், 'நாங்கள்இதுதொடர்பாகஆலோசித்துவருகிறோம். பல்வேறுகாரணங்களால் இந்தச் சூழ்நிலை கடினமானதாக உள்ளது. இது தொடர்பான முடிவைத்தற்போதுகூறமுடியாது' என்றார்.

**பின்னணி**

துருக்கி நாட்டின் வான் எல்லையைப் பாதுகாக்கும் வகையில் ரஷ்யாவிடம் இருந்துஅதிநவீனஎஸ்400ஏவுகணைகளைத்தடுப்புக்கவன்களைக்கொள்முதல் செய்வதற்குத் துருக்கி அரசு ஒப்பந்தம் செய்தது. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தால் எவ்35 ரக போர் வானூர்தித் தயாரிப்பில் துருக்கிக்கு அளித்துவரும் முன்னுரிமை நீக்கப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்தார். அத்தோடுஇந்தஒப்பந்தத்தைநீக்குவதற்கு ஜூலை 31 ஆம் திகதி வரை அவகாசம்வழங்கினார். எவ் 35 ரகபோர் வானூர்தித் தயாரிப்புத் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிக்காக அமெரிக்காவுக்குச் சென்ற துருக்கி நாட்டு விமானிகளை அமெரிக்காவில் தங்கவிட மாட்டோம் எனவும் அவர் எச்சரித்தார். ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்கும்நாடுகளின்மீதுவிதிக்கப்படும் பொருளாதாரத் தடை துருக்கி மீதும் விதிக்கப்படும்எனவும்அமெரிக்கஅரசு குறிப்பிட்டது.

### இந்தியாவில் பயங்கரம்

# சூனியத்தில் ஈடுபட்டதாகக் கூறி நான்கு பேர் அடித்துக்கொலை

புதுடெல்லி, ஜூலை 22

இந்தியாவின் ஜார்க்கண்ட் பகுதியில் பில்லி சூனியம், மந்திர தந்திரங்களில் ஈடுபட்டதாகக் கூறி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் அடித்துக் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜார்க்கண்ட் சிஸ்காரி கிராமத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் நடந்தது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் வீட்டுக்குள் இருந்த 60 வயது மிக்க சாப்பா ஓராயோன், அவரது மனைவி மற்றும் இரண்டு பேர் ஆகிய நான்குபேரை வெளியே இழுத்து வந்து அவர்களின் தொண்டையை அறுத்துக் கொன்றனர்.

“கொல்லப்பட்டவர்கள் வீட்டுக்குள் சூனிய, மந்திரதந்திரங்களில் ஈடுபட்டதாகத் தாக்குதல் நடத்தியவர்கள் நம்பியுள்ளனர்.

அதன் அடிப்படையில் அவர்களை வெளியே இழுத்துவந்து கொன்றுள்ளனர்” என்று பொலிஸ் கண்காணிப்பாளர் அனன்ஜனி குமார் ஜா இதுகுறித்துத் தெரிவித்தார். கொல்லப்பட்ட குறித்த குடும்பத்தி னரால் தமது கிராமத்தில் சில மோசமான நிகழ்வுகள் நடந்துள்ளதாகத் தெரிவித்த கிராமவாசிகள் பில்லி, சூனிய மந்திர தந்திரங்களில் ஈடுபட்டுவரும் அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக அதிகாலை 3 மணியளவில் கூடியதாகவும், அதன்பின் இந்தச் சம்பவம் நடந்ததாகவும் பொலிஸ் கண்காணிப்பாளர் மேலும் தெரிவித்தார். சாவடைந்தவர்களின் உடல்கள் உடற்கூறுப் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் குறித்து நேற்றுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. ஜார்க்கண்டில் இதுபோன்ற காரணங்களுக்காகக் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ஆயிரம் பேர் அடித்துக்கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்துக்குத் தண்ணீர் திறப்பு!

சென்னை, ஜூலை 22

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்குக் காவிரி ஆற்றில் கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. காவிரி மேலாண்மை ஆணையகம், ஜூலை மாதம் தமிழகத்துக்குக் காவிரியில் 34 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கர்நாடகாவுக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால் கர்நாடக மாநிலத்தில் போதிய மழை இல்லாததால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த நிலையில், கபினி அணையின் நீர்பிடிப்புப் பகுதியான கேரள மாநிலம் வயநாட்டிலும், கேஆர்எஸ், அணையின் நீர்பிடிப்புப்பகுதியான குடகு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து மழை பெய்து வருவதால் வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் தமிழகத்துக்குக் காவிரியில் திறந்து விடப்பட்டது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை அதிகரித்துள்ளதால் தமிழகத்துக்குத் தொடர்ந்து கூடுதல் தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. கேஆர்எஸ் அணையில் இருந்து வினாடிக்கு 7ஆயிரத்து 800 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதில், வினாடிக்கு 2ஆயிரத்து 611 கன அடி தண்ணீர் கால்வாய்கள் மூலம் விவசாயிகளின் பாசனத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. தமிழகத்துக்குச் சுமார் 5ஆயிரம் கன அடி தண்ணீர் செல்கிறது.

கபினி அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் இரு கபினி அணைகளில் இருந்தும் தமிழகத்துக்கு வினாடிக்கு 8ஆயிரம் கன அடிக்கும் கூடுதலான தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. தண்ணீர் தட்டுப்பாட்டாலும், வறட்சியாலும் அவலத்தை எதிர்கொண்டுவந்த நிலையில் தமிழகத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.காவில் இணையுமாறு மிரட்டல்!

*மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு*



இந்தியாவின் ஆளும் கட்சியான பா.ஜ.காவில் இணையுமாறு கூறித் திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு அரசின் உளவு அமைப்புகள், வருமானவரித்துறை ஆகியவை மிரட்டல் விடுக்கின்றன என்று மோடி அரசு மீது மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம் சுமத்தினார். கொல்கத்தாவில் உள்ள தரம்தலாவில் நேற்றையதினம் திரிணமூல் காங்கிரஸ் கட்சி சார்பில் நடந்த பேரணியில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் பா.ஜ.க. ஏமாற்றித்தான் வெற்றி பெற்றுள்ளது. மின்னணு வாக்கு இயந்திரங்கள், சி.ஆர்.பி.எப். பொலிஸார், தேர்தல் ஆணையகம் ஆகியோரைக் கைவசம் வைத்து ஏமாற்றித் தேர்தலில் பா.ஜ.க வென்றுள்ளது. மேற்குவங்கத்தில் 18 இடங்களைக் கைப்பற்றிய நிலையில் திரிணமூல் காங்கிரஸ் அலுவலகங்களைக் கைப்பற்ற முயல்கிறார்கள், தொண்டர்களைத் தாக்குகிறார்கள். கைதுசெய்யப்பட்டு சிறையில் இருக்கும் திரிணமூலம் காங்கிரஸ் கட்சித் தலைவர்களைப் பா.ஜ.காவில் சேருமாறும் இல்லாவிட்டால் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்றும் அரசின் உளவு அமைப்பு, வருமான வரித்துறை போன்றவை மிரட்டல் விடுத்து வருகின்றன - என்றார்.



ஸ்பெய்னின் பம்ப்லோனாவில் நடந்த 'சான் வ்பெர்மின்' என்கிற திருவிழாவில் காளை அடக்கும் போட்டியில் காளையை அடக்குவதற்காக ஒருவர் காளை மீது குதித்த காட்சி இது.



## இன்றைய நாள்

**மேடம்:** தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். சுபசெய்தி வந்து சேரும். பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்குவர்.

**இடபம்:** உங்கள் செயலில் கவனச் சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரம் சீர்பெற நவீன மாற்றம் செய்ய வேண்டியதிருக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** முக்கிய செயல் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உபரி வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**சிம்மம்:** குடும்பத்தினர் மத்தியில் செல்வாக்கு கூடும். செயல்களில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவும், நன்மையும் அதிகம் கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். சுயகவுரவம் பாதுகாக்க முயல்வீரகள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். சுற்றுப்புற சூழ்நிலையால் நித்திரை-தாமதமாகலாம்.

**துலாம்:** சமயோசிதமாக செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதலாக பணிபுரிவீர்கள். பணவரவு திருப்தியளிக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும். வீடு மற்றும் வாகனப் பாதுகாப்பில் அதிக கவனம் தேவை.

**விருச்சிகம்:** மங்கள நிகழ்வுகளால் இனிமை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி ஏற்படும். லாபம் அதிகரிக்கும். நண்பரால் உதவி உண்டு.

**தனுசு:** வாக்குறுதி நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். லாபம் மிதமாக அமையும். உறவினர் வகையில் செலவு செய்ய நேரிடலாம்.

**மகரம்:** சமூகப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தெய்வ அனுகூலத்தால் முக்கிய செயல் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உருவாகும்.

**கும்பம்:** தன்மானத்திற்கு சோதனை வரலாம். தொழில் சார்ந்த இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**மீனம்:** தைரியத்துடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உண்டாகும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். விருந்து விழாவில் பங்கேற்க வாய்ப்புண்டு.

## ‘சுப்பர் 8’ சுற்றில் சென்.அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 22
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி ‘சுப்பர் எட்டு’ ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது. (ம-23)



### எவ்.ஏ. கால்பந்துத் தொடரில்

## ஞானமுருகன் அணி இறுதிக்கு சென்றது



யாழ்ப்பாணம், ஜூலை 22
யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஞானமுருகன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)



## பளுதூக்கல் தொடரில் ஆசிகாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
இலங்கைப் பாடசாலைகள் பளுதூக்கும் சம்மேளனத்தின் பாடசாலை மாணவர்களுக்கான பளுதூக்கும் தொடரில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி ஆஷிகா தங்கப்பதக்கம் வென்றார்.

கேகாலை இரஜகிரிய டிப்பிட்டிய மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கும் தொடரில் ஆசிகா ஒட்டுமொத்தமாக 175 கிலோ பளுவைத்தூக்கி தங்கப்பதக்கம் வென்றார்.

அத்துடன் அனைத்துப் பிரிவிலும் சிறந்த பளுதூக்கும் வீராங்கனையாகவும் தெரிவானார். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

**கால்பந்தாட்டம்**

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று முதல் இடம்பெறவுள்ளன. இதன்படி இன்று மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகாத்மாஜி அணியை எதிர்த்து சென்.றொக்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## வடக்கு அணிகள் தேசியத்தில் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 22
தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் வடமாகாண அணிகள் இருபால் பிரிவிலும் இரண்டாவது இடத்தைத் தமதாக்கியுள்ளன.

**பெண்கள் பிரிவு**

அனுராதபுரம் விளையாட்டுக் கட்டடத் தொகுதி உள்ளகரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வடக்கு மாகாண பெண்கள் அணியை எதிர்த்து மேல் மாகாண பெண்கள் அணி மோதியது.

இதில் மேல் மாகாண பெண்கள் அணி 76:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

**ஆண்கள் பிரிவு**

ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் வடக்கு மாகாண ஆண்கள் அணியை எதிர்த்து மேல் மாகாண ஆண்கள் அணி மோதியது. இதில் மேல் மாகாண ஆண்கள் அணி 77:44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)





# நெய்மருக்காக இரு வீரர்கள்!

## பார்சிலோனாவின் டீல் இது

பிரானஸ் கழகமான பரிஸ் செயின்ட் ஜேர்மனில் இருக்கும் நெய்மரை மீண்டும் தனதாக்குவதற்காக இரண்டு வீரர்களை இழப்பதற்குத் தயாராகியுள்ளது பார்சிலோனா.

பார்சிலோனா அணியில் விளையாடி வந்த நட்சத்திர வீரரான நெய்மர், இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாவுக்கு பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக கடந்த 2017ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஐந்து வருடங்களுக்கு அவரின் ஒப்பந்தம் அமைந்தது.

எனினும் நெய்மர் பரிஸ் ஜேர்மன் இடையிலான உறவில் விரிசல் நிலை ஏற்பட்டது. இதனால் நெய்மரை விற்றுவிட பரிஸ் ஜேர்மன் தற்போது முயன்று வருகிறது.

வாய்ப்பைப் பயன்படுத்தி பார்சிலோனா நெய்மரை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்தது.

பார்சிலோனாவுக்கு நெய்மருக்காகத் தான் வழங்கிய 4 ஆயிரம் கோடி ரூபாவை திரும்பப் பெற்றுவிடுவதற்குத் திட்டமிட்ட பரிஸ் செயின்ட் ஜேர்மன் தான் வழங்கிய தொகையைத் திரும்பத் தருமாறு கோரியது. ஆனால் இந்தத் தொகை தற்போது பார்சிலோனாவிடம் இல்லை. ஏனெனில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர்தான் அந்த அணி இலங்கை மதிப்பில் இரண்டாயிரம் கோடி ரூபாவுக்கு கிரீஸ்மனை வாங்கியது. ஆதலால் நெய்மருக்குப் பதிலான பரிஸ் ஜேர்மனுக்கு இரண்டு வீரர்களையும் சுமார் ஆயிரத்து 300 கோடி ரூபாவையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது பார்சிலோனா. ராகிடிக், உம்திதி ஆகிய இருவரையுமே அவ்வாறு வழங்குவதற்குச் சம்மதித்துள்ளது. (ம)



# ஆப்கானிஸ்தானின் கோரிக்கை நிராகரிப்பு

BCCI

இந்தியாவில் நடக்கும் உள்ளூர் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர்களை விளையாட அனுமதிக்க வேண்டும் என்ற ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் கோரிக்கையை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிராகரித்தது.

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் எந்தவொரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை. மேலும் அந்தப் போட்டியில் ஏதாவதொரு அணிக்கு நெருக்கடியைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அது இடம்பெறவில்லை.

9 ஆட்டங்களிலும் தோல்வியடைந்து பூஜ்ஜியமாக வெளியேறி ஏமாற்றம் அளித்தது. தரம் வாய்ந்த அணிகளை எதிர்கொள்ள வேண்டுமென்றால், உள்ளூர் போட்டிகளில் வீரர்கள் விளையாடுவது அவசியம்.

அந்த அணி இந்தியாவில் உள்ள மைதானங்களை சொந்த மைதானமாக கொண்டு விளையாடி வருகிறது. மேலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வளர்ச்சிக்கு பல்வேறு வகையில் உதவி வருகிறது. இந்தியாவில் முதல் தர கிரிக்கெட் சிறப்பாக உள்ளதால், ஆப்கானிஸ்தான் வீரர்கள் அதில் விளையாடினால் திறமை மேம்படும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை நினைத்தது.

இதனால் இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் போட்டிகளில் ஆப்கானிஸ்தான் வீரர்களை விளையாட அனுமதிக்க வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆனால் இதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நிராகரித்து விட்டது.



# தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும்

## தைபு வலியுறுத்தல்

சிம்பாப்வே அணிக்கு ஐ.சி.சியால் விதிக்கப்பட்டுள்ள தடை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் அந்த அணியின் முன்னாள் தலைவர் தைபு.

சிம்பாப்வே அணிக்குள் அரசியல் தலையீடுகள் அதிகமாக உள்ளன என்று தெரிவித்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் அந்த அணிக்குத் தடை விதித்தது ஐ.சி.சி. தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் தைபு தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சிம்பாப்வே அணிக்குள் அரசியல் மோதல்கள், ஆதிக்கங்கள் உள்ளன என்று ஐ.சி.சி தெரிவித்திருப்பது வருத்தம் தருகிறது. இந்தத் தடை உடனடியாக நீக்கப்படல் வேண்டும். வீரர்கள் தொடர்ந்தும் விளையாடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். சிம்பாப்வே அணியின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு இந்தத் தடை மிகப்பெரும் பாதிக்கை ஏற்படுத்தும். ஆதலால் தடையை உடனடியாக நீக்க வேண்டும். அதற்கு ஐ.சி.சி. உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தைபு மேலும் தெரிவித்தார். (ம)





# சச்சினுக்கு ஐசிசி புதிய மகுடம் சூட்டியது

இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் மற்றும் தென்னாபிரிக்கா முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஆலன் டோனல்ட் ஆகியோர் பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 'ஹால் ஆஃப் ஃபேம்' என்ற புகழ் பெற்றோர் வரிசையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளர் காத்ரின் ஃபிட்ஸ்பாட்ரிக் என்பவரும் இந்த 'ஹால் ஆஃப் ஃபேம்' இல் சேர்க்கப்பட்டுள்ளனர். லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மூவரும் பன்னாட்டு கிரிக்கெட் சபையால் 'ஹால் ஆஃப் ஃபேமுக்குள்' நுழைந்தனர்.

ஒரு வீரர் ஓய்வு பெற்று 5 வருடங்களின் பின்னரே 'ஹால் ஆஃப் ஃபேமில்' நுழைய தகுதி பெற முடியும், சச்சின் டெண்டுல்கருக்கு சமீபத்தில் தான் அந்தக் காலக்கெடு முடிந்தது. பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் 'ஹால் ஆஃப் ஃபேமில்' இடம்பெற்ற 6ஆவது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார் சச்சின்.




# றோயல் அணி முன்னேற்றம் கண்டது

யாழ்ப்பாணம், ஜூலை 22

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி சுப்பர் எட்டு ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை சென். ஹூட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 7:1 என்ற கோல் கணக்கில் றோயல் அணி வெற்றிபெற்றது. (ம-23)



ஐரோப்பிய கழகங்களில் ஒன்றான வலன்சியா அணி வீரர் டானி பாரியோ அடுத்த போட்டிக்கான தயார்ப்படுத்தலுக்காக கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

# ஆஷஸுடன் ஆரம்பமாகிறது டெஸ்ட் சம்பியன்ஷிப்

International Cricket Council

பன்னாட்டுக் கிரிக்கெட் சபை சுமார் 10 ஆண்டுகளாக நடத்தத் திட்டமிட்டு வந்த டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி இடம்பெறும் ஆஷஸ் தொடருடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் 9 அணிகள் இந்தத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் உள்நாடு, வெளிநாடு என்று இருவகைத் தொடர்களிலும் விளையாடுதல் மிகமிக அவசியம். இரண்டு வருடங்களுக்கு இந்தத் தொடர் இடம்பெறும். புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களையும் பிடிக்கும் அணிகள் 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்தில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதும். டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான முழுமையான அட்டவணை ஐ.சி.சியால் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

Parcel.lk

வெளிநாட்டு பொதிகள் சேவைக்கு முகவர்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரபல பொதிகள் சேவைகள் நிறுவனமான பார்சல் லங்கா இற்கு சேவை முகவர்களை வழங்க எண்ணி உள்ளோம் ஆகையால் உங்கள் பெயர் வியாபாரத்தின் பெயர்முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

agency@parcel.lk

# தலைவராக நீடிக்கிறார் கோக்லி அணியிலிருந்து டோனி நீக்கம்!



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணித் தலைவராக கோக்லி நீடிக்கிறார். தலைமைப் பொறுப்புக்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. டோனி அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

உலகக்கிண்ணத்தொடர்முடிவடைந்ததை அடுத்து இருதரப்புத் தொடர்கள் ஆரம்பமாகவுள்ளன. உலகக்கிண்ணத் தொடரில் சாதித்த அணிகளைத் தவிர ஏனைய அணிகள் பல்வேறுபட்ட மாற்றங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்திய அணி அரையிறுதியுடன் தொடரில் இருந்து வெளியேறியதால் அந்த அணியின் தலைவரான கோக்லி தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப்படலாம் என்றும் டோனி அணியில் இருந்தே நீக்கப்படலாம் என்று கருதப்பட்டது. இந்தப் பரபரப்புக்களுக்கு மத்தியில் இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

தலைமைப் பொறுப்புக்களில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் டோனி அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். பும்ராவுக்கு ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களில் இருந்து கட்டாய ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக அவதிப்பட்டுவந்த சஹா மீண்டும் டெஸ்ட் அணிக்குள் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய ரி20 அணி - கோக்லி (தலைவர்), ரோகித் (துணைத் தலைவர்), தவான், கே.எல்.ராகுல், ஷ்ரேயாஸ் அய்யர், மனீஷ் பாண்டே, ரிஷப் பன்ட், குருணால் பாண்டியா, ரவீந்திர ஜடேஜா, வொஷிங்டன் சுந்தர், ராகுல் சஹார், புவனேஷ்வர் குமார், கலீல் அகமது, தீபக் சஹார், நவ்தீப் சைனி.

இந்திய ஒருநாள் அணி விராட் கோக்லி (தலைவர்), ரோகித் சர்மா (துணைத் தலைவர்), சிகர் தவான், கே.எல்.ராகுல், ஷ்ரேயாஸ் அய்யர், மனீஷ் பாண்டே, ரிஷப் பன்ட், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், யுவேந்திர சாஹல், கேதார் ஜாதவ், மொகமது ஷமி, புவனேஷ்வர் குமார், கலீல் அகமது, நவ்தீப் சனி.

இந்திய டெஸ்ட் அணி விராட் கோக்லி (தலைவர்), ரகானே (துணைத் தலைவர்), மயங்க் அகர்வால், கே.எல்.ராகுல், புஜாரா, ஹனுமா விஹாரி, ரோகித் சர்மா, ரிஷப் பன்ட், விரித்திமான் சஹா, ரவிசந்திரன் அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், இஷாந்த் சர்மா, மொகமது ஷமி, ஜஸ்பிரித் பும்ரா, உமேஷ் யாதவ்.

(ம)

பரந்தனிலுள்ள YMCA வாலிபர் தேசிய பயிற்சி நிலையத்திற்கு
பணிப்பாளர் தேவை!

2ஆம் மைல் கட்டை, பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட பயிற்சி நிலையத்தில் பணிப்பாளர் வெற்றிடத்திற்காக கீழ்க்காணும் தகைமை உள்ள ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

- ✓ விவசாய பட்டப்படிப்பு
- ✓ வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஒருங்கிணைந்த விவசாயத்தில் அறிவும் அனுபவமும்
- ✓ திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலில் அறிவும் அனுபவமும்
- ✓ விவசாய பண்ணை முகாமைத்துவ அறிவும் அனுபவமும்

வார நாட்களில் தங்கியிருந்து கடமைகளை பொறுப்பாக செய்யக்கூடிய 30-55 வயதுடைய ஆண்கள் விரும்பத்தக்கது. இருப்பினும் அண்மையில் ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட தகைமையுடைய, YMCA யுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் சமூக மேம்பாட்டில் பங்கெடுக்க விருப்பமுடையவர்கள் தங்களது விண்ணப்பத்தை சுயவிபர கோவையுடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதி ஆடி மாதம் 2019 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

YMCA NATIONAL YOUTH TRAINING CENTRE
*The National Council Of the YMCAs of Srilanka*
*# 143, St. Michael's Road, Colombo-03*

# டோனியின் பெயரை பரிசீலிக்கவில்லை!

## தெரிவுக்குழு தெரிவிப்பு




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் இருந்து டோனியின் பெயர் நீக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் பெயரைப் பரிசீலிக்கவேயில்லை என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

டோனி இரண்டு மாதங்கள் இராணுவப் பணிக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்தமையாலேயே அவரின் பெயர் பரிசீலிக்கப்படவில்லை என்று தெரிவுக்குழு அறிவித்துள்ளது. ஆனால், தெரிவுக்குழு தன்னை கட்டாய நீக்கம் செய்யவுள்ளதை அறிந்ததாலேயே டோனி இரண்டு மாதங்கள் இராணுவப் பணிக்காகச் செல்லவுள்ளேன் என்று தெரிவித்தார் என்று இந்திய ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டுள்ளன.

(ம)

## மரண அறிவித்தல்

### செல்லையா கந்தசாமி



மீசாலையை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கணேசபுரத்தையும், இராமனாதபுரத்தையும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா கந்தசாமி அவர்கள் (19.07.2019) வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் கணேசமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை சோமசுந்தரம், செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயக்குமார்,உதயகுமார்,சுரேஸ்குமார்,ஜெயவதனி, சுரேசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஜெயந்தி, திருவருட்செல்வி, தவச்செல்வம், பிரணவர் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெஷானா, செந்தூரன், வருணியா, ஹரின், கயான்,அபிலாஸ், அபிசன்யா, அபிலக்ஷன், ஷாம்கதிர், நிலைளசி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.07.2019) திங்கட்கிழமை அவரின் இல.02, கணேசபுர இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11.00மணியளவில் கிளி. திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
கணேசபுரம், கிளிநொச்சி
0757839786

வேலையாள்கள் தேவை

பின்வருவனவற்றுக்கு வேலையாள்கள் தேவை.

1) சாரதி (கனரக வாகனம்) - யாழ். - கொழும்பு - குருநாகல்
2) பண வசூலிப்பாளர்

077 350 8952

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.